OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
16 OCT 1903
MADRAS

ஓம்.

பரப்பிரம்மணே நம:

"ஏகம் சத் விப்ரா பஹுதா வதந்தி."

# இகபரசுகசாதனி.

வாலியம் I. } 1903௵ ஜூலைமீ {புத்தகம் III.

## மனனமாலை.

யாதுமன நினையுமந்த நினைவுக்கு நினைவாகி
யாதின் பாலும்
பேதமற நின்றுயிருக் குயிராகி யன்பருக்கே
பேரா னந்தக்
கோதிலமு தூற்றரும்பிக் குணங்குறி யொன்றறத்
தன்னைக் கொடுத்துக் காட்டுந்
தீதில்பரா பரமான சித்தாந்தப் பேரொளியைச்
சிந்தை செய்வாம்.

---

இனியே தெமக்குனருள் வருமோ வெனக்கருதி
யேங்குதே நெஞ்சமையோ
வின்றைக் கிருந்தாரை நாளைக் கிருப்பரென்
றெண்ணவோ திடமில்லையே
யனியாய மாயிந்த வுடலைநா னென்றுவரு
மந்தகற்கா ளாகவோ
வாடித் திரிந்துநான் கற்றதுங் கேட்டது
மவலமாய்ப் போதனன்றே
கனியேனும் வறியசெங் காயேனு முதிர்சருகு
கந்தமூலங்க ளேனுங்
கனல்வாதை வந்தெய்தி னள்ளிப் புசித்துநான்
கண்மூடி மௌனியாகித்
தனியே யிருப்பதற் கெண்ணினே னெண்ணமிது
சாமிநீ யறியாததோ
சர்வபரி பூரண வகண்ட தத்துவமான
சச்சிதானந்த சிவமே.

---

ஒன்றென்றும் பலவென்று முபயமென்று முருவென்று மருவென்று முறைவதென்று, நன்றென்றுந் தீதென்று நானேயென்று ஞானமென்று ஞேயமென்று ஞாதாவென்று, மன்றென்று மாமென்றுஞ் சமயப்பேய்க ளறைகின்ற பிணக்குவழி யனைத்துநீத்துக், குன்றவிலா வானந்தக்குரவனின்னைக் கும்பிட்டே னென்பிறவி யின்பிட்டேனே.

---

பூவின்மணம் போலுள்ள புண்டரீகத் துள்ளேமா
தேவியொடு நீங்காச் சிவனுரைத்—தாவிநீ
யைம்புலனை வென்றுங் கறிந்தா லவனுவை
யைம்புலனுக் கெட்டா னவன்.

---

ஆகாய மெங்கு மகண்டமாய் நின்றாற்போ
லீகாய மின்றியெங்கு நிற்பாயேல்—மாகாயத்
துள்ளொளியா மீசனுனைப் பிரியாதே நின்ற
கள்ளந் தெரியுமங்கே காண்.

---

மாயையெனுமிவ் வுரைக்கருத்த மதிக்கின்யா தொன்றி லாததுவே, மாயை யெனவிப் படியிருக்க மதிப்பரதனை யிருவகையாய், மாயை மெய்யென் றுரைத்திடுவர் மயக்கப்பட்டுத் தனைமறந்தோர், மாயை பொய்யென் றுரைத்திடுவர் மயக்கநீங்கித் தனையறிந்தோர்.

---

மித்தையதனைப் பற்றிடவும் விடவும் வேண்டா விவ்வுலகை, மித்தையெனக் காண்குதல் போதும் விட்டுநீங்கு மூடனுடுங்கே, எத்தை விடுத லெதைப்பற்ற லென்னிற்சீவத்துவமான, அத்தைவிடுதல் தனைநோக்குமதைப்பற்றிடுதல் நெறியாகும்.

---

யானே யென்னை யறிய கிலாதே
யானே யென்றன தேயென் றிருந்தேன்
யானே நீயென் னுடைமையு நீயே
வானே யேத்துமெம் வானவ ரேறே.

---

எனதாவி யுட்கலந்த பெருநல்லுதவிக் கைமாறு
எனதாவி தந்தொழிந்தே னினிமீள்வ தென்பதுண்டே
எனதாவி யாவியுநீ பொழிலேழு முண்டவெந்தாய்
எனதாவி யார்யானார் தந்தநீகொண் டாக்கினியே.

---

நெஞ்சமே நல்லைநல்லை யுன்னைப்பெற்றால்
என்செய்யோ மினியென்ன குறையினம்
மைந்தனை மலராண் மணவாளனைத்
துஞ்சும்போது விடாதுதொடர் கண்டாய்.

---

## தத்துவசோதனை.

பசி, தாகம், பிணி, மூப்பில்லாமல் பிறப்பு இறப்பில்லாமல் நித்தியமான சுகத்தையே கொடுக்கும் வீட்டை அடைய மனிதர்கள் எல்லோரும் விரும்புவார்கள். அவ்வீட்டையடைய பலவழிகள் கூறப்பட்டிருந்தும் ஒன்றையாவது கைப்பற்றி அனுஷ்டித்து வீட்டையடைய யோக்கியதை யுடையவராக அதிதீவரமாய் பிரயத்தினம் செய்பவர்கள்சிலரே. அதிலும் பலவழிகளுள் உண்மையைத் தெளிவாகவும் கோரிய வீட்டை அதிக சீக்கிரத்தில் அடையச் செய்வதாயுமுள்ள வழியைக் கடைப்பிடித்து ஒழுகுவோர் மிகச்சிலர். காரணம்யாது? நாளைக்கு அகப்படும் பலாப்பழத்தைக் காட்டிலும் இன்றைக்கு அகப்படும் களாப்பழம் மேலானதென்று எண்ணுவதுபோல் ஏதோ மோக்ஷம் ஒன்றிருக்கிறதாம், அது அழிவில்லாத சுகம்கொடுக்குமாம், அதை அடைய கிரமமாக அனுஷ்டித்துவர பலவழிகளுளவாம், என்னமோ சிலர் சொல்லுகிறார்கள், இதெல்லாம் கண்டவர்கள்யார், அவர் கூறுவது மெய்யோ பொய்யோ, அதற்காக இப்போது கிடைத்திருக்கும் உலகசுகத்தை விடுவானேன், இது அற்பமானதா யிருந்தாலும் இப்போது கையிலகப்பட்டிருக்கிறது, வீடோ நாம் பலநாள்உழைத்தபின் னடையவேண்டியது, ஆகையால் உலகசுகமே மேலானதென்று எண்ணுவதுதான் காரணம். இக்காரணம் பற்றி வீட்டையடைய முயற்சி செய்யாதிருப்பது நன்றாகுமா?

எத்தனைநாளானாலும் எத்தனை ஜன்மங்களானாலும் இவ்வுலகசுகம் அற்பமானதென்றும்துன்பத்தையே தருவதென்றும் வெறுத்து வீட்டையே விரும்பி அதை அடைய முயர்ச்சியை செய்யவேண்டியதாகவேமுடியும். இதுதிண்ணம். ஆனதுபற்றி அனேகஜன்மங்களில்துன்பத்தை யனுபவித்தபின் வீட்டையடைய பிரயத்தினம் செய்வதைக் காட்டிலும் இப்போதே உண்மையில் பிரயத்தினம் செய்தால், அனேக ஜன்மங்களினுடைய கஷ்டம் ஒழிவது மல்லாமல் நித்தியமான பேரின்பம் இப்போதே கிடைக்கும். தனித்திருந்து சிறிது யோசிக்கும் புத்திமான்களுக்கு இதுவேசரியெனத் தோன்றும்.

வீடு என்றால் விடுதல் என்று அர்த்தம். விடுதலே வீடென்று கூறியதால் நாம் எதையோ இப்போது பிடித்துக்கொண்டிருக்க வேண்டும், அதை விடுதலே வீடு. நம்மை பிடித்துக்கொண்டிருப்பது எது என்று விசாரிக்கும் முன்னமே சிறிது ஜன்மாந்தரத்தைப் பற்றி யோசிப்போம். நமக்கு இதற்கு முன்னும் பின்னும்ஜன்மம் உண்டாவென்பது ஒருபெருங்கேள்வி. ஒருபெருங் கருணைத் திருவருளால் சிருஷ்டிக்கப்பட்ட ஐம்பூதச் சேர்க்கையாலுண்டாய தேகத்தைப்பெற்ற மனிதர்கள் எல்லாரும் ஒருவிதமான ஸ்திதியில்லாமல் சிலர் சம்பத் துடையவர்களாயும், சிலர் தரித்திரராயும், சிலர் சர்வாதி காரமுமுள்ள இராஜாக்களாயும், சிலர் அடிமைகளாயும், சிலர் எல்லா அவயவங்களும் நன்றாய்ப் பொருந்தி தேகப் பொலிவையுடையவராயும், சிலர் கையோ அல்லது காலோ யில்லாத முடவராயும், செவிடராயும் குருடராயும் ஊமையாயும், சிலர் அதிக கூர்மையான புத்தியுடையவராயும் சிலர் மந்தபுத்தி யுள்ளவர்களாயு மிருக்கிறார்கள். உதாரணமாக கால்நொண்டியாயுள்ள ஒருமனிதனை எடுத்துக் கொள்ளுவோம். அவன்கால் ஏன் நொண்டியாயிருக்கிறது? இந்தநொண்டி சரீரத்தை அவனே எடுத்துக்கொண்டானா அல்லது வேறே யாராவது நொண்டியாக்கினார்களா? அவனிஷ்டப்படி சரீரம் எடுத்துக்கொள்ளுகிறதாயிருந்தால் அவன் நல்ல சரீரத்தையே எடுத்துக்கொள்வானே யல்லாமல் நொண்டிசரீரத்தைஎடுத்துக்கொள்ளமாட்டான். அவன்சரீரம் மாதாவினுடைய கர்ப்பத்திலேயே உண்டாகிறபடியால், கர்ப்பத்தில் பிரவேசித்து அவன்காலை நொண்டியாக்கவேறொருமனிதனாலாகமாட்டாது. இதனால்என்னஏற்படுகிறது? அவன் செய்தகுற்றம் அல்லது பாவத்திற்கு அவனுக்கு கர்ப்பத்திலேயே சிட்சை கொடுத்ததினாலே இதற்கு முந்தியஜன்மத்திலே அவன்செய்த பாவத்திற்கு கொடுத்த சிட்சையாயிருக்கவேண்டும். இதற்கு முன்ஜன்மத்தில் அவன் இல்லாவிட்டால் அவனுக்குப் பாவமேயில்லை. பாவம் இல்லாததினாலே அவன் கால்நொண்டியாகவேண்டிய நியாயம் இல்லை. பாவம் செய்யாதவனை சிட்சிக்க நியாயமில்லை. ஆகையினால் முன் ஜன்மம் உண்டென்று ஏற்படுகிறது. இதற்குமுன் ஜன்மம் இருந்தால் ஏன் இனிமேலும் ஜன்மம் இருக்கக் கூடாது. இந்தஜன்மத்தில் செய்யும் பாவபுண்ணியங்களுக்கு தக்கவாறு மறு ஜன்மமெடுக்க வேண்டியது அவசியமே. இதனால் முன்னும் பின்னும் நமக்கு ஜன்மங்கள் உண்டெனவே தெரியவருகிறது:—

சற்றேறக்குறைய ஒரேவயதுள்ளசிலமாணாக்கர்கள் ஒன்றுகூடி ஓர் உபாத்தியாயரிடத்தில் பாடம் கேழ்க்கப் போகிறார்கள். ஒருவிஷயத்தைக்குறித்து அம்மாணாக்கர்களுக்கு ஒரேகாலத்தில்ஒரேவிதமாய் அவ்வுபாத்தியாயர் பாடம் சொல்லினும், அப்பிள்ளைகளெல்லோரும் அவ்விஷயத்தைஒரேவிதமாய்த்தெரிந்துகொள்ளுகிறதில்லை. ஒருவன் விஷயத்தைப் பூரணமாய் அறிகிறான். மற்றொருவன் கொஞ்சம் குறைவாய்அறிகிறான், இன்னொருவன்

சொன்ன விஷயத்தை விட்டு வேறொருவிஷயம் சொன்னதாக அறிகிறான். மற்றுமொருவன் சொன்ன தின்னதென்று அறியவகையிலாது மற்றொரு மாணக்கனை கெஞ்சிக்கேட்கிறான். இவர்கள் படித்தவிஷயத்தைக் குறித்து பரிட்சை செய்யுங் காலத்து எல்லாரும் ஒரு விதமான பதிலைச் சொல்லாமல் கேட்டகேள்விகளுக்கு ஏற்றக்குறைவாயும் சம்பந்த மில்லாததாயு முள்ள சமாதானங்களைச் சொல்லுகிறார்கள். இதற்கென்ன காரணம்? எல்லாரும் சமவய துடையவர்கள். கேட்டவிஷயம் ஒன்றுதான். பாடம் சொன்னவரும் ஒரே உபாத்தியாயர். ஏன் பிள்ளைகளிடத்து வித்தியாச மிருக்கவேண்டும். அந்தந்தப் பிள்ளைகளின் மனப்பரிபாகத்திற்குத் தக்கவாறு வித்தியாசங்களும் உண்டாகிறது, மனதின் பரிபாகத்தில் வித்தியாசமிருப்பானேன்? அந்தந்தப்பிள்ளைகளின் முன்ஜன்மத்தில் அவரவர்கள் செய்துவந்த வியாபாரங்களேகாரணம். முன்ஜன்மமிருந்து அவரவர்கள் பலவித வியாபாரங்களைச் செய்து இல்லாமற்போனால் இஜ்ஜன்மத்தில் எல்லாரும் ஒருவிதமான மனப்பரிபாக முடையவர்களாய் கற்ற விஷயத்தை ஒவ்வொருவரும் ஒருவிதமாய் ஒரு அளவில் தெறிந்து கொள்ள வேண்டும். அப்படி யில்லாததினால் முன்ஜன்மம் உண்டெனவே தோன்றுகிறது.

சங்கீதம் கற்றுக்கொள்ள வேண்டி அதற்கு ஓர் உபாத்தியாயரை ஏற்படுத்திக்கொண்டு அனேகவருஷங்கள் சங்கீதத்தை கிரமமாய் சாஸ்திரசம்மதமாய் கஷ்டப்பட்டு கற்றுக்கொண்டும் சபையில்வந்து பாடும்போது தாங்கள் கஷ்டப்படுவது மல்லாமல் பிறரையும்வருத்தி, எப்போது பாட்டை நிறுத்தி விடுவானென பிறர் எண்ணும்படி சிலர்பாடுகிறார்கள். வேறுசிலர் அதிகபால்ய வயதிலேயே நல்லசாரீரம் அமைக்கப் பெற்றவர்ளாய் யாராவது பாடும்போது ஒருதரம் இரண்டுதரம் கேட்ட மாத்திரத்தில் பாட சக்தியுள்ளவர்களாகி சிறிதுநேரம் பாடினாலும் ஜீவகளையுடன் இராகங்களைச் சுகமாய்ப்பாடுகிறார்கள். அதைக்கேட்பவர்கள், இப்பிள்ளைக்கு பாட்டில் நல்லமனோதர்மமிருக்கிறது நன்றாய் விருத்தியாவானெனப்புகழ்ந்து பேசுகிறார்கள். அவர்கள்கூறியவண்ணமே நாளடைவில் மேன்மேலும் சங்கீதம் கேட்பதினாலும் சிறிதுகாலம் குருவினிடத்து கற்பதினாலும் அத்தகைய்ச் சிறுவர்கள்விருத்தியாகி சீக்கிரத்தில் பிரபல வித்துவான்களாகிறார்கள். இதற்கென்னகாரணம்? முன்ஜன்மத்தின் பழக்கமே.

ஒருவாலிபன் பார்ப்பதற்கு அழகாயும் நல்லஆடை ஆபரணங்களை அணிந்துகொண்டு அதிக கம்பீரமாய் இரண்டு குதிரைகள்பூட்டிய நல்லவண்டியிலுட்கார்ந்து கொண்டு சீமானாய் முன்னே இரண்டு வேலையாட்கள் ஓடவும்பின்னே இரண்டுபேர் நாதம் ஒலிக்கவும் வழியிற் கண்டவர்கள் மனதைக்கவரும்படியாகச் சவாரிச்செய்யப் பார்த்தவர்கள், "யாரோயிவன். மிக்கஅழகுவாய்ந்தவன், நல்ல சம்பத்துடையவன். வெகு உல்லாசமாய்ப் போகிறான். முன்ஜன்மத்தில் நல்லபுண்ணியம்செய்தானுக்கும். பாவத்தைப்பண்ணி நாம் பஞ்சாய்ப் பறக்கிறோமே" என்று கூறுவதை அனேகர் கேட்டிருக்கலாம். அப்படியே சொல்லியு மிருக்கலாம். இப்படிச்சொன்னவர்கள் யாராவது ஜன்மாந்தரத்தைக்குறித்து சாஸ்திர மூலமாயாவது அல்லது தங்கள் சொந்த யுக்திகளாலாவது அறிந்தவர்களா? இல்லை. அப்படியிருந்தும் ஜன்மாந்தரம் உண்டென்னும் நம்பிக்கை ஒன்றையும் விசாரியாமலே அவர்களுக்கு ஏற்பட்டிருப்பதினாலே, ஜன்மாந்தரத்தின் அனுபவம்பெற்ற ஜீவன் அவர்கள் உள்ளிருந்து உணர்த்த அவர்கள் சொல்லுகிறார்களெனத் தீர்மானிக்க வேண்டியதாய் இருக்கிறது.

ஒருமனிதன் தேகஅசௌக்கியமுற்று மிகவும் கஷ்டப்பட்டுத்தேறியபின் ஐயா நான் அந்தக்கொடிய வியாதியினால் பீடிக்கப்பட்டு மிகவும் வருத்தமெய்தி மரணாவஸ்தைப்பட்டேன்என்று கூறுகிறான். மரணாவஸ்தையை இதற்குமுன் அம்மனிதன் அனுபவித்திருந்தால் அல்லாமல்மரணாவஸ்தை இன்னதென்று அவனுக்கு எப்படித்தெரியும்? முன் ஜன்மமில்லாத பட்சத்தில் அவன் மரணமடைந்தது எப்போது? முன்னும் பின்னும் இல்லாமல் ஒருஜன்மமே உளதானால் ஒரு மரணந்தானே உண்டு. அந்த ஒருமரணத்தை அடைந்தபின் அதனுடைய அவஸ்தானுபவத்தைச் சொல்ல மனிதனெங்கே? அவ்வவஸ்தானு பவத்தைக் கூற மனிதர்கள் இருப்பது கொண்டு முன்ஜன்மம் இருந்திருக்கவேண்டுமென்றும் அஜ்ஜன்மத்தை விட்டு நீக்குங் காலத்துண்டாய மரணத்தின் அவஸ்தையை அனுபவித்த ஜீவன் உள்ளிருந்து உணர்த்த மனிதன் மரணாவஸ்தைப் பட்டேனென்று கூறுகிறான் எனத்தானே முடிக்கவேண்டும். இவ்விதமாய் ஆலோசிக்கின் ஜன்மாந்தரங்கள் உண்டென்று ஸ்தாபிக்க இன்னும் அநேக அனுபவ விஷயங்கள் இருக்கின்றன. இதுநிற்க நம்மை எது பிடித்துக் கொண்டிருப்பதால் பந்தத்திலிருக்கிறோமோ எதைவிட்டால் நாம் வீட்டை யடைவோமோ அதைக் குறித்து இனிவிசாரிப்போம்;—

இதுகாறும் கூறிப் போந்ததில் நம்முடைய செய்கைக்குத் தக்கவாறு ஜன்மங்க ளுண்டாகிறதென்றும்,

ஒரு ஜன்மத்திலுண்டான திடமான மனோபாவம் மாறாமல் அடுத்த ஜன்மங்களிலும் வந்துகொண்டேயிருக்கிறதென்றும், ஜன்மங்களில் மாறிமாறி வந்துகொண்டிருப்பது சரீரங்களேயென்றும் ஏற்படுகிறது. முன் ஜன்மங்களிலும் இஜ்ஜன்மத்திலும் இனிவரப் போகிற ஜன்மங்களிலும் நாமிருப்பதால் நாம் நித்தியரென்றும் விளங்குகிறது. அழிவில்லாத நம்மை எது பிடித்துக் கொண்டிருப்பதால் பிறப்பதாயும் இறப்பதாயும் எண்ணிப் பந்தப்பட்டிருக்கிறோ மென்பதை இனி விசாரிப்பாம்.

நாமிப்போது மனிதசரீரத்தை எடுத்திருக்கிறோம். அடுத்த ஜன்மத்தில் பசுவாகப் பிறந்தால் நமக்கு இப்போதிருக்கும் கைகள் பசுஜன்மத்தில் யிருக்கமாட்டா. ஆனதினால் கைகள் இந்த சரீரத்திலேயே நின்றுவிடுகின்றன. நமக்கு கைகள் சொந்தமாயிருந்தால் நாம் எடுக்கும்படியான பசுஜன்மத்திலும் இருக்கவேண்டு மல்லவோ, அப்படி யில்லாதபடியால் கர்மேந்திரியங்கள் நம்மைப் பிடித்துக்கொண்டிருக்கவில்லை. பசு சரீரத்திற்கு கர்மேந்திரியங்கள் ஐந்துக்குக் குறைவுபடுகிறது. இப்படியே வேறு சில ஜன்மங்களைப் பார்த்தோமானால் கர்மேந்திரியங்கள் இன்னும் குறைவுபடும். ஆகையால் கர்மேந்திரியங்கள் சரீரசம்பந்தமேயல்லது சரீரியாகிய நம்மைப் பிடித்துக்கொண்டிருக்கவில்லை.

வண்டாய்ப் பிறந்தோமானால் நமக்கு இப்போதிருக்கும் காதுகள் வண்டுஜன்மத்தில் இருக்கமாட்டா. ஆகையால் சுரோத்திரேந்திரியம் இந்தசரீரத்திலேயே நின்றுவிடுகின்றன. கறையான், எறும்புமுதலிய ஜன்மங்களெடுத்தோமானால் நமக்கு இப்போதிருக்கும் காதுகள் கண்கள் அந்த ஜன்மங்களில் கிடையா. விருக்ஷமாகப் பிறந்தோமானால் ஸ்பரிசமென்னும் ஓர் இந்திரியமாத்திரம்பெற்று இரசம் கந்தம் ரூபம் சத்தம் இவைகளை அறியவல்ல வாய், மூக்கு, கண், செவி, இவைகளில்லாமல் இருப்போம். இதனால் ஞானேந்திரியங்களும் நம்மைப் பிடித்துக்கொண் டிருக்கவில்லை. அவைகள் நமக்குச்சொந்தமாயிருந்தால் நாமெடுக்கும் எந்த ஜன்மங்களிலும் அவைகளிருக்கவேண்டும். அப்படி யில்லாததால் ஞானேந்திரியங்கள் சரீரசம்பந்தமேயல்லது சரீரியாகிய நம்முடைய சம்பந்தமல்ல. பாவபுண்ணியங்களுக்குத் தக்கவாறு சரீரங்கள் வந்துபோய்க்கொண்டிருக்கின்றன. ஆகையால் நமக்கு ஸ்திரமான சரீரமேயில்லை. ஆனதினால் சரீரம் நாமல்ல, நம்மைச்சரீரமும் பிடித்துக்கொண்டிருக்கவில்லை.

பசுவாகப் பிறந்தால் நாம் இப்போது சாப்பிடும் ஆகாரத்தைவிட்டு அப்போது புல்லை அல்லவோ புசிக்க வேண்டும், ஆகாரங்களும் சரீரத்துக்குதக்கபடி ஏற்பட்டபடியால் அவைகள் சரீரசம்பந்தமேயல்லது சரீரியாகிய நம்முடைய சம்பந்தமல்ல. ஆகாரம் நம்மைப்பிடித்துக்கொண்டிருக்கவுமில்லை.

இதுவுமல்லாமல் இந்த ஜன்மத்திலுள்ள செவிடு, ஊமை, வலி, வியாதிகள், காயங்கள் முதலானவைகள் இந்ததேகத்திலேயே நின்று மற்றொருதேகத்திற்கு வராமலிருப்பதினாலே இவைகளும் சரீரசம்பந்தமே யல்லாமல் சரீரியாகியநம்மைப்பிடித்துக்கொண்டிருக்கவில்லை.

இந்தஜன்மத்தில் நமக்கிருக்கும் தாய்தந்தை பெண்டு பிள்ளைகள் வருகிற ஜன்மத்தில் நமக்கு என்னமுறை யாவார்களோ அறியோம். இப்போதிருக்கிற நமது தாயும் தகப்பனும் இனிவரும் ஜன்மாந்தரங்களில் நமது உடன் பிறந்தார்களாக ஆகலாம். அல்லது சத்துருக்களாகவாவது, மித்திரர்களாகவாவது ஆகக்கூடும். ஆகையால் இந்த தாய்தந்தைமுதலான பந்துக்கள் சரீரசம்பந்திகளே யல்லாமல் சரீரியாகிய நம்மைப் பிடித்துக்கொண்டிருக்கவில்லை.

இப்போது இந்தவீடு இந்தப்பணம் நம்முடையதென்றும் அடுத்த வீட்டானுடைய சொத்துக்களையும் அபகரிக்க எண்ணுகிறோம். மறுஜன்மத்தில் அடுத்த வீட்டில் நாம்பிறந்தால் இப்போது நமதென்று எண்ணியிருந்த சொத்துக்களை யல்லவோ அபகரிக்க எண்ணுவோம். இதனால் வாஸ்தவத்தில் நம்முடைய சொத்துக்கள் எவை? நமக்குச் சொந்தமான சொத்துக்களே யில்லை. ஆகையால் சொத்துக்களும் சரீர சம்பந்தமேயல்லது சரீரியாகிய நம்முடையதல்ல. அவைகள் நம்மைப் பிடித்துக் கொண்டிருக்கவுமில்லை.

இப்போது சிலர் பிராமண ஜாதியைச் சேர்ந்தவராயும் சிலர் வைசியராயும் பிறந்து இந்தஜாதி ஆசாரங்களை அனுஷ்டித்து வருகிறோம், அடுத்த ஜன்மத்தில் பஞ்சமர்களாகப் பிறந்தால் அந்தஜாதிக்கடுத்த ஆசாரத்தை யல்லவோ அனுஷ்டிப்போம். ஆகையால் வருணாசிரம தருமங்கள் சரீரசம்பந்தமேயல்லாமல் சரீரியாகிய நம்முடையசம்பந்தமல்ல, அவைகளும் நம்மைப்பிடித்துக் கொண்டிருக்கவில்லை.

இப்போது சிலர் சைவராயிருந்துகொண்டு வைஷ்ணவரை தூஷித்தும் சிலர் வைஷ்ணவரா யிருந்து சைவரை தூஷித்தும் வருகிறோம். அடுத்த ஜன்மத்தில்

இப்போது சைவராக யிருப்போர்கள் வைஷ்ணவராகப் பிறந்து சைவரையே தூஷிக்கலாம். அப்படியே இப்போது வைஷ்ணவராக யிருப்போர் மறுஜன்மத்தில் சைவராகப்பிறந்து வைஷ்ணவர்களையே தூஷிக்கலாம். ஆகையால் மதங்களும் சரீரசம்பந்தமே யல்லாமல் சரீரியாகிய நம்முடைய சம்பந்தமல்ல.

இப்போது நமக்கு கோவிந்தன் - கோபாலன் - சுந்தரன் எனப் பெயரிட்டிருக்கிறார்கள். நமக்கு முந்திய ஜன்மத்தில் என்ன பெயரிட்டிருந்தார்களோ வருகிற ஜன்மத்தில் என்ன பெயரிடுவார்களோ அறியோம். பெயரும் சரீரசம்பந்தமே யல்லாமல் சரீரியாகிய நமக்கில்லை.

இப்போது நமக்கு நூறுவயதென்று வேதம் ஆயுசு விதித்திருக்கிறது. அடுத்த ஜன்மத்தில் குதிரையாகப் பிறந்தால் அப்போது நமக்கு ஆயுசு முப்பத்திரெண்டென அவ்வேதமே சொல்லும். ஆகையால் ஆயுசு சரீரத்திற்கு விதிக்கப் பட்டிருக்கிறதே யல்லாமல் சரீரியாகிய நமக்கு ஆயுசு விதிக்கப் படவில்லை. மேற்கூறியவை யெல்லாம் சரீரத்தையே பிடித்துக்கொண் டிருக்கிறவைகளே யல்லாமல் சரீரியாகிய நம்மை பிடித்துக்கொண் டிருக்கவில்லை. "ஊரனந்தம் பெற்ற பேரனந்தஞ் சுற்று முறவனந்தம் வினையினு, லுடலனந்தஞ் செயும் வினையனந்தங் கருத் தோவனந்தம் பெற்றபேர், சீரனந்தஞ் சொற்கமு மனந்தநற்றெய்வமு மனந்தபேதந், திகழ்கின்றசமயமு மனந்தமதனுன் ஞான சிற்சத்தியா லுணர்ந்து, காரனந்தங்கோடி வருஷித்த தெனவன்பர் கண்ணும் விண்ணும் தேக்கவே, கருதரியவானந்த மழைபொழியு முகிலைநங் கடவுளைத் துரியவடிவைப், பேரனந்தம் பேசி மறைய னந்தஞ் சொலும் பெரிய மௌனத்தின் வைப்பைப், பேசரு மனந்தபத ஞானவானந்தமாம் பெரியபொருளைப் பணிகுவாம்" என்று மௌனமென்பது ஞானவரம்பென நன்குணர்த்திய நமது தாயுமானவருங் கூறினர்.

சோதனைசெய்து பார்த்ததில் நம்முடையதென்றுவது அல்லது நம்மை பந்திக்கவாவது ஒன்றுமில்லாதிருக்க மேற் கூறியவைகளை யெல்லாம் நமதென்று பிரமித்ததே பந்தம். இப்பந்தத்தினின்று நீங்குதலே வீடு. சரீரம் நாமல்லவென்றால் நமக்கு வியாதி ஏது? சரீரத்திற்கே ஆயுசு என்றால் நமக்கு மரணமேது? மரணமில்லையேல் நமக்கு பிறப்பேது? பிறப்பு, வியாதி, மரணம் இவைகள் நமக்கில்லை யென்றால் நமக்கு துக்கமேது? ஒருகாலத்திலும் துக்கமில்லை யென்றால் உள்ளது நித்திய சுகந்தானே. அதுதானே வீடு மேற்கூறியவாறு எல்லாவற்றையும் நாமல்ல நாமல்ல வென்று நியதி களைந்தபின் மிஞ்சியது ஏது? இவ்வளவையும் சோதித்து அறிந்த அறிவுதான் மிஞ்சியது. அந்தஅறிவுதான் நாம். அறிவு என்று சொன்னதால் அறிவையுடையவன் ஒருவன் இருக்கவேண்டுமே. இந்தவிஷயத்தைப்பற்றி பிறகு பேசுவாம்.

---

## மாதர் ஒழுக்கம்.

—∞※∞—

பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற் பென்னுந்
திண்மை யுண்டாகப் பெறின்."

என்னும் குறளில் ஒருவன் பெறுதற்குறிய கற்புடைய மனையாளினும் உயர்வானது என்ன யிருக்கின்றது? அவளிடத்தே கற்பென்னும் கலங்கா நிலைமை இருக்கப்பெற்றால்; என்று திருவள்ளுவநாயனார் திருவாய்மலர்ந்தருளினபடியால் உலகத்தில் பெண்களாய்ப் பிறந்தவர்கள் தமக்குரிய நாண், மடம், அச்சம், பயிர்ப் பென்னும் நால்வகைக் குணங்களை யுடையவர்களாய் மனதைப் பலவிடத்தும் செல்லவிடாது நிறுத்திக் கற்புநிலை கெடாது காக்கவேண்டும். மேற்கூறிய நாற்குணங்களில் நாணென்பது நாணம். மடமென்பது எல்லாம் அறிந்தும் அறியாதுபோ லிருத்தல். அச்சமென்பது என்றும்காணாததைக் கண்ட விடத்தஞ்சுதல். பயிர்ப்பென்பது கணவரல்லாதவர் கைமேற்படின் உடம்பு அருவருத்தலாம். விவாகம் இல்லாமல் கன்னிகைகளாக யிருக்குங் காலத்தில் மாதா பிதாக்களினுடைய ஆதீனத்திலும், விவாகமான பின்னர் பர்த்தா ஆதீனத்திலும், பர்த்தாவிற்குப் பிற்காலம் புத்திரர் ஆதீனத்திலும் புத்திரர் இல்லாவிட்டால் சகோதரர் ஆதீனத்திலும் இருக்கவேண்டுமே யல்லாமல் பெண்கள் தாங்களே சுவாதீனமாய் யிருக்கப்படாது. கொண்ட கணவனை மேன்மையாகப்பாவித்து அவன் சொல்லைத் தடுக்காமல் அவனுக்குக் கீழ்ப்படிந்து, பொய் பேசாமல் அவன் விஷயத்தில் உண்மையாய் நகமும் சதையும்போல மனைவி அவன் கருத்தின்வழி நடக்கவேண்டும். பெண்ணை விவாகம் செய்து கொடுக்குங் காலத்து, பிதா நல்ல வித்தியார்த்திக்குக் கொடுக்கவேண்டுமென்றும், மாதா தன்மகள் ஐசுவரியவானுக்கு வாழ்க்கைப்பட வேண்டுமென்றும், சுற்றத்தார் நல்ல குலாசாரத்தை யுடையவனுக்கு கொடுக்கவேண்டு மென்றும், அந்தப்பெண்ணனவள் அழகிற் சிறந்தவனை மாலையிட வேண்டுமென்றும் நினைக்கிறதுண்டு. ஆயினும் எல்லாம் கோரியபடி கிட்டுமா? தெய்வச் செயலின்படி யல்லவோ சம்பவிக்கும். "குலமகட் கழகு தன் கொழுநனைப்பேணுதல்" என்பதனால்

தன் புருஷன் அழகிருந்த ஊரில் குடியிருந் தறியாத குரூபியா யிருந்தாலும் அவனை மன்மதனாகவும், என்றும் அசாத்திய ரோக முடையவனா யிருந்தாலும் அரோக திடகாத்திரனாகவும், நிரட்சர குட்சியா யிருந்தாலும் கல்விக் களஞ்சிய மாகவும், கணக்கறியாத நிர்மூடனா யிருந்தாலும், நிபுணனாகவும், உண்ணச் சோற்றிற்கும், உடுக்கக் கந்தைக்கும், கையில் அரைக் காசுக்கும் வழியில்லாத அஷ்டதரித்திரனா யிருந்தாலும், குபேர சம்பத் துடையவனாகவும் பாவனை செய்து அவனை அவமதியாமல் ஒழுகவேண்டும். மனைவி யானவள் பர்த்தாவிற்குத் தாதியைப்போலப் பாதப் பணிவிடை செய்பவளும் மந்திரிபோலச் சமயோசிதமறிந்து நல்லஆலோசனைகளைச்சொல்லுபவளும் ஸ்ரீமகாலட்சுமி போலப் பெண்ணைப் பெண் இச்சிக்கத் தக்க அதிரூப சௌந்தரியவதியாயும் பூமாதேவிபோலச் சலியாதபொறுமை யுடையவளும் வேசிபோலக் கணவனை சரச கேளி விநோதத்தாற் பிரியப் படுத்துகின் றவளுமாயு மிருப்பதன்றி, அன்புள்ள தாய்போல இனிய உணவுகளாற் போஷிக்கின்றவளுமாயிருக்கவேண்டும். மேலும் "தாய்க்குப்பின் தாரம்" என்றும் உலகம் கூறுகிறது. ஒருக்கால் கணவன் கோபித்தால் தானுங் கூடக்கோபியாமல் அவன்தனக்கு அநுக்கிரகித்ததாகவும், அவன் வைதால் அவனைத்தானும் வைதிடாமல் தன்னை அவன் வாழ்த்தினதாகவும்நினைத்தால், அவன்பொல்லாதமூர்க்கனானாலும் அவனுடைய கல்லான நெஞ்சங் கரைந்து பரமசாதுவாவான். "வல்லடிவழக்கைச் சொல்லடிமாமி" என்று மாமியுடனே வாதுசெய்யாமல் அவளைத்தாய் போலக்கருதி அவள்காலிலே பட்டது தன்கண்ணிலே பட்டதாகக் குடும்பபாரத்தையெல்லாம்ஏந்திக்கொண்டு அவளும் கண்மணியாகிய என்செல்வ மருமகளைப் போலத் தேடக்கிடைக்குமா என்று சொல்லும்படி அந்நியோந்நியமாய் நடந்து "மாமியார்மெச்சிய மருமகளில்லை" என்னும் பழமொழியைப் பகைக்கவேண்டும். ஒரு பெண்பேசினால்பூமிஅதிரும், இரண்டுபெண் பேசினால் நட்சத்திரம்உதிரும், மூன்றுபெண் பேசினால் கடல்சுவறும், நான்குபெண்பேசினால் உலகம்யாதாகுமோ என்பதனால் யாருடனும் இடியிடித்ததுபோல் உரக்கப் பேசாமல், குயில்கூவுதல்போல் இனியகுரலாகக், கிளிகொஞ்சுவதுபோல் மிருதுபாஷியாய் வசனிக்கவேண்டும். உலகத்தார் இராக்காலத்திற்கு உதவியாக வேண்டியதைப் பகற்காலத்திலும் மழைக்காலத்திற்கு வேண்டியதைக் கோடைகாலத்திலும் முதுமைக்கு வேண்டியதை இளமையிலும் மறுமைக்குவேண்டியதை இம்மையிலும் தேடிவைத்துப் பாதுகாப்பதைப்போல் இல்வாழ்க்கைக்கு வேண்டிய பொருள்களையெல்லாம் தருண மறிந்து சேகரித்துப் பின்னுக்காகுமென்று சிக்கெனக்காப்பாற்ற வேண்டுமேயல்லது, வீட்டிலுள்ள பண்டங்களை அநியாயத்தில் அழிக்கலாகாது. ஆண்மக்களிலாவது, பெண்மக்களிலாவது துஷ்ட ஜெந்துக்களா யிருக்கின்றவர்கள், தாரதம்மியம் பாராமல் அக்கிரமமாய்ப் பேசினால் "நாய்குலைத்துநத்தம்பாழாகுமா" என்று நினைத்து சாதுவாய்ப்போக வேண்டுமேயல்லாமல் அவர்களை எதிரிட்டு அஞ்சாது தெருச்சண்டைக்கு வருதல் ஆகாது. புருஷனுக்குப்பொருள் வருமானமின்றி அவன் வறுமைப் படுங் காலத்தில் "ஏருழுகிறவன் என்னசெய்வான் பானைபிடித்தவள் பாக்கியம்" என்று நினைக்க வேண்டுமேயல்லாமல் அவன் சம்பாதிக்கவில்லை யென்று மனஞ்சலிக்கும்படி அவனைச் செல்லரிப்பதுபோல எந்நேரமும் வருத்தப்படுத்தலாகாது. தாமரையில்லாத தடாகமும், சந்திரனில்லாத ஆகாயமும், புலவர்களில்லாத சபையும், அரசனில்லாதநாடும், மந்திரியில்லாத அரசும், படைத்தலைவ னில்லாத சேனையும், தெய்வஸ்துதியில்லாத நாவும், நல்ல சிந்தையில்லாத நெஞ்சும், கிருபையில்லாத நேத்திரமும், பயனில்லாத சொல்லும், மணமில்லாதமலரும்போல கற்புடையமனைவியில்லாத வீடு சிறப்பின்றி இடுகாட்டுக்கொப்பாம்.

வித்வசிரோமணியாகிய பொய்யாமொழிப் புலவர் பூர்வம் மதுரையில்முழுகிப்போன தமிழ்ச் சங்கத்தைப் பரிபாலனம் பண்ணும்படி அக்காலத்தில் அரசாண்டு வந்த வணங்காமுடிமாறன் என்னும் பாண்டியனிடத்தில் பேசுவதற்கு அவனைத்தேடிப் போனபொழுது அவன் கோயிலுக்குச் சுவாமிதரிசனஞ் செய்யப்போயிருக்கிறதாக கேள்வியுற்று, அவர் சொக்கநாதர் சந்நிதிக்குப் போனவிடத்தில் அவ்வரசன் சுவாமியைச் சாஷ்டாங்கமாகச் சேவித்துக்கொண்டிருக்கக் கண்டு புலவரானவர்,

"குழற்கா லரவிந்தங் கூம்பக் குமுதமுங்க யவிழ
நிழற்கான் மதியமன்றோ நின்றிருக் குலநீ யவன்றன்
அழற்கா லவிர்சடைமீ தேயிருந்து மவ்வந்தி வண்ணன்
கழற்கால்வணங்குதியோ வணங்காமுடிக் கைதவனே."

என்னும்பாடலைக்கேட்டுஅரசன்அவரைநீர்யார்? என்ன, அவர் பொய்யாமொழியென்னும் தமது காரணப்பெயர் முதலிய பூர்வோத்தரத்தையும் தாம் கொண்ட கருத்தையும் வெளியிடப் பாண்டியன் இவரோ சங்கத்தைப் பரிபாலிப்பவர் என்று எளிதாக எண்ணி, அங்குச் சங்கத்தார்க்குப் பிரதியாகச் சிலையினால் செய்துவைத்து இருக்கின்ற பிம்பங்களைக்காட்டி, நீர்பொய்யாமொழி என்

றது மெய்யாகுமாயின், இந்த விக்கிரகரூபமா யிருக்கும் சங்கப்புலவர்கள் சிரக்கம்பம் கரக்கம்பஞ்செய்யப் பா டும் என, அவர்.

"உங்களிலே நானொருவ னெவ்வேனே வொப்பேனே
திங்கட் குலனறியச் செப்புங்கள்—சங்கத்துப்
பாடுகின்ற முத்தமிழ்க்கென் பைந்தமிழு மொக்குமோ
ஏடவிழ்தா ரேரெழு வீரே.

என்றுபாட அந்தபிம்பங்கள் அங்ஙனமே சிரக்கம்பம் கரக்கம்பம்செய்தன. பின்பு பொற்றாமரை என்னும் தீர்த்தத்தருகில் அவரை அழைத்துப்போய் இதில்முழு கிப் போயிருக்கின்ற சங்கப்பலகை மிதக்கப்பாடும் பார் ப்போமென, அவர்

"பூவேந்தர் முன்போற் புரப்பாரிலே யென்றும்
பாவேந்த ருண்டென்றும் பான்மையால்—மாவேந்தன்
மாறனறிய மதுரா புரித்தமி ழோர்
வீறணையே சற்றே மித.

என்றுபாடின மாத்திரத்தில் அது மிதந்தது. இப்படிப் பட்ட பலசாதுரியங்களால் அவரதுகல்வியின்அருமை யும் பெருமையும் பெரும்பாலும் கண்டு தெளிந்தும் இறுமாப்பினால் அவருக்கு சம்மானஞ்செய்யாமலிருக்க, இவன் தக்கோனல்லவென்று அவர் அங்கிருந்துதிரும்பி தமது சுதேசத்திற்கு வருகையில் இந்தச் செய்தியைப் பாண்டியன் மனைவி அறிந்து அவர் பொய்யாமொழியார் ஆதலால் அவர் சொல்வது நன்றாயினும் தீதாயினும் பொய்யாது பலிக்குமேயென்று நடுநடுங்கிப், புலவர் பெருமான் கோபத்தை ஆற்றவேண்டு மென்று, தான் சிவிகை சுமப்பவரைப்போல வேடம்பூண்டுவந்து அவ ரது சிவிகையைச் சிலதூரம் சுமந்துசெல்ல அவர்அது கண்டு அவளைநோக்கி கற்புக்குத் தாய் போல்வாளே! நீ யேன் இப்படிச்செய்தாய் என, அவள் சுவாமி! இராஜா தேவரீர் விஷயத்தில் அபசாரப்பட்டதை தாம் கருணை கூர்ந்து அவரை வாழ்த்தவேண்டுமென்னும் நோக்கத் தால் இங்ஙனம் புரிந்தேன் என, அவர் நல்லதென்று இராஜபத்தினியை முன்னிட்டு.

"உமைபாதி நீயுமொருங் கொப்பே யொப்பே
உமையாளுக் கங்குண்டோ ரூனம்—உமையாடன்
பாகந்தோய்ந் தாண்டான் பலக்குழந்தான் பாண்டியனின்
ஆகந்தோய்ந் தாண்டா னரசு."

என்னும் பாடலைப்பாடினார். இவ்வரசன் தேவிபோல மனைவி புருஷனுடைய குற்றத்தால் அவனுக்குவரும் தீங்கினை ஆய்ந்துணர்ந்து வாராமற் காப்பதல்லவோ விசேஷம்.

தெய்வப்புலமைத் திருவள்ளுவர் தம் தேசயரில் லாள் வாசுகியென்னும் மாசற்றொளிரு மணிவிளக் கொத்தவள் பொற்புவிளங்கிக் கற்புவழுவா தில்லறம் நடாத்தி யின்புற்றுவாழ்ந்து மாண்டபின்பு மயானத்திற் கொடுபோய்த் தகன சமுஸ்காரம் தான் செய்கையில், நெடுகோள் நகமுஞ் சதையும் போலவும் உடலும் உயி ரும்போலவும், மனதொத்து பிரிவற்றிருந்த அருமை மனைவியைப் பிரியவேண்டி வந்தமைப்பற்றி அவர் க ண்ணீர்விட்டு அவளை நோக்கி, வேழமுண்ட விளக்கனி யாகி, சிற்பரால் எழுதறும் பொற்பாவை போல்வாளே! என் நாவிற்கினிய அறுசுவை உணவும் அமைத்து என் னருகிலிருந்துஎன்னை உபசரித்து உண்பித்துப்போஷிக் கின்றவளே! என்னிடத்தில் அனவரதமும் மாறாத உள் ளன்புடையாளே! தெருவாசற்படி கடவாதவளே! என் சொல்லுக்கு எதிர்மறுத்து உரையாது கடவுள் வாக்கா கியவேதம்போல் உண்மையாகக்கொண்டு நடப்பவளே! இரவில் என்பாதத்தை நெடுநேரமாக வருடிக்கொண் டிருந்து நான் நித்திரைசெய்தபின்பு, நீநித்திரைசெய்து நான் விழிப்பதற்கு முன்விழித்து எழுந்திருப்பவளே! நீ இப்போது என்னைவிட்டுப் பிரிந்துபோய்விடுகின்றனை யே, இனிநான் எப்படிக்கண்ணுறக்கம் கொள்வேனென் னும் கருத்தை உள்ளிட்டு.

"அடிசிற் கினியாளே யன்புடை யாளே
படிசொற் கடவாத பாவாய்—அடிவருடிப்
பின்றூங்கி முன்னெழூஉம் பேதையே போதியோ
என்றூங்கு மென்கணி ரா."

என்ற செய்யுளைப்பாடி விசனப்பட்டார். யோசிக்கு மிடத்தில் தாமரையிலை நீரும் புளியம்பழமும் போல மனைவாழ்க்கையில் ஒட்டியும், ஒட்டாத மகாத்மாவாகிய அவரும் அந்த மாதர்க்கரசியின் நற்குண நற்செய்கை களினாலல்லவோ அப்படிப் பரிதாபிக்கும்படி நேரிட் டது. ஆகையால் மாதர்கள் ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் கற்புநிலைமையைக் காப்பார்களாக.

## மத ஆராய்ச்சி.

(முன்தொடர்ச்சி.)

முன்னோர்களால் ஏற்படுத்தப்பட்டிருக்கும் ஆசா ரங்களையாவது, ஜாதி நடவடிக்கையாவது யாரும் அழி க்க ஆரம்பிக்கக்கூடாது. ஏற்பட்டிருக்கும் நியாயங்க ளெல்லாம் நல்லெண்ணத்துடன் ஜனங்களின் விருத்தி யைக்கருதி சுயநன்மையைப்பாராட்டாத மகரிஷிகளால் உண்டாக்கப்பட்டவைக ளாதலால், ஒவ்வொருவரும் கூடுமானால் மென்மேலும் ஜனங்களுக்குப் போதித்து

அவர்களை விருத்திசெய்யவேண்டும், இருப்பதை அழித்தல் கூடாது. முடியுமானால் விஷயங்களை நன்றாய் விளக்கி விர்த்திசெய்தல் நலம், சக்தியிலதேல் இருப்பதை யழிப்பதைக்காட்டிலும் சும்மாயிருத்தல் அதிக மேன்மை. ஒத்தாசை செய்யவேண்டும்; அது முடியாத பக்ஷத்தில் தீங்குசெய்யாதிருத்தல் எவ்வளவு நன்று. ஓர் மனிதன் பக்திசிரத்தையுடன் ஒன்றையனுசரித்தால் மற்றொருவன் அதைக்கெடுத்தல் நன்றன்று. அவன் அனுசரிக்கும் மார்க்கத்திலேயே அம்மனிதனை மென்மேலும் விர்த்திசெய்யவேண்டும். எல்லாஜீவர்களும் ஒருபகவானிடத்திருந்து உண்டானவர்களாதலால் எந்த மதத்தை யனுசரித்தாலும் முடிவில் அப்பகவானிடத்தில்தான் வந்தடையவேண்டும். இதுசத்தியம். ஆனது பற்றி யொன்றையும் தூஷித்தல்கூடாது. ஒவ்வொரு மனிதனும் அவனவனுடைய சுபாவத்திற்கும் சக்திக்கும் தக்கவாறு தன்னை விர்த்திசெய்துக்கொண்டிருக்கிறான். மனிதர்கள் தாங்களே மனவூக்கத்துடன் ஓர் வேலையில் பிரவேசித்தாலல்லாமல் மற்றொருவர் சொல்லுவதேபோதாது. பிறர்சொல்லும் விஷயங்களெல்லாம் ஒருமனிதனுடைய மறதியைநீக்கி ஞாபகத்தை உண்டுபண்ணுமேயன்றி விஷயம் தெறிந்துகொள்ள வேண்டியது அம்மனிதனேயாம். ஒருவன் தன்னைத்தானே விர்த்திசெய்துக்கொள்ளவேண்டும். ஓர் குழந்தைக்குக்கூட நாம் ஒன்றும் கற்பிக்கமுடியாது. அக்குழந்தைகள் தெரிந்துக்கொள்ளக் கூடாதிருக்கும் தடைகளை நிவர்த்திசெய்வதுதான் நாம்செய்யும்காரியம். ஒருசெடி வளர்க்கவேண்டுமானால் அதை இதரமிருகங்கள் அழிக்காவண்ணம் வேலிபோட்டுப் பாதுகாத்தலே மனிதன்செய்யும் தொழில். அதை வளர்ப்பிக்கும்சக்தி மனிதனுக்கில்லை. செடி தானேவளருகிறது, அதுபோல் மனிதனும் தானேதான் விர்த்தியாகவேண்டும். குருவானவர் என்ன செய்யக்கூடும்? ஒருமனிதனுக்கு உண்மையான விஷயங்களைப்போதிப்பர். அதோடே அவர்வேலை முடிந்தது. உபதேசித்த விஷயத்தை மனதில்கொண்டு சிந்தித்து உண்மை யறியவேண்டியது அம்மனிதனே யல்லவா? ஒருவனை மற்றொருவன் விர்த்திசெய்கிறான் என்பது உண்மையில் இல்லை. ஒருவனுக்கு அவன் ஆத்மாவைக் காட்டிலும் வேறேகுருகிடையாது. இதனால் குருவேண்டாமென்று அர்த்தமன்று. குருசெய்வதெல்லாம் மிகக் கொஞ்சம். அதிகம் உழைக்கவேண்டியது சிஷ்யனேயாகும்.

உலகத்தில் மனிதர்களின் சுபாவங்கள் பலவாயிருக்கின்றன. எண்ணங்களும் குணங்களும் ஒழுக்கங்களும் ஆயிரங்கணக்காயிருக்கின்றன, ஆனால் பெரும்பாலும் பொதுவாயமைந்திருக்கும் குணங்களைப்பெற்றிருக்கும் மனிதர்களை நான்குவகையாகப் பிரிக்கலாம். முதலாவது சுறுசுறுப்பாயுள்ள மனிதர்கள் இருக்கிறார்கள். அவர்கள் தேகத்தில் வலிவு அதிகம். எப்போதும் வேலைசெய்வதே அவர்களுக்குப் பிரியம். சத்திரங்கள் முதலானவை கட்டுதலும் இடிந்த பழையகோயில்களை புதிதாக்குகிறதும், கிராமங்களைச் சுத்தம்செய்தலும், இன்னும் பலவிதமான தர்மகாரியங்களை நடத்துவதே அவர்களுக்குக் கொண்டாட்டம். ஒரு க்ஷணமேனும் அவர்கள் சும்மாயிரார்கள். சாஸ்திரத்தில் கூறிய கர்மங்களைவிடாது செய்வதில் அதிக இஷ்டமுடையவர்கள்; இவர்களைக்கர்மகாண்டிகளெனக்கூறலொக்கும். இரண்டாவது வகுப்பினர் உலகத்தில் கம்பீரமாயும் விசித்ரமாயுமுள்ள வஸ்துக்களைப் பார்ப்பதில் இஷ்டமுடையவர்கள். அவர்களுக்கு உலகத்தில் எந்த வஸ்துவும் சுகமாகவேதோன்றும். கடவுளால் சிருஷ்டிக்கப்பட்ட எந்த வஸ்துக்களிலும் குணங்களையே கண்டு அதிசயித்து பகவானுடைய பெருமைக்கும் சக்திக்கும் ஆச்சரியப்பட்டு, சதாபகவானை துதிப்பார்கள். வேறுயாராவது பகவானது குணாதிசயங்களை எடுத்துச் சொல்லின் அதை மிகவும் ஆவலுடன் கேட்டானந்திப்பார்கள். பகவத் குணாமிருதத்தை யெல்லோரும் அருந்தி சுகமடையும்படிசெய்த மகா பக்தர்களிடத்து அவர்களுக்கு மிகுந்த அன்புண்டு. பகவானது அவதாரங்களில் மிக்கநம்பிக்கையுடையவர்கள். இராமன் பிறந்ததுண்டா? கிருஷ்ணன் இருந்ததுண்டா? வென ஆசங்கிக்கமாட்டார்கள். சந்தர்ப்பம் நேர்ந்தகாலத்தில் பகவானுடைய அவதாரங்களில் நடந்த லீலாவிநோதங்களையே உபமானங்களாக எடுத்துக்கூறுவார்கள். இத்தகையோரை பக்தர்களெனச் சொல்லலாம். ஜனங்களில் சிலர், மனது எவ்வண்ணம்? தேகதத்துவம் எப்படி? தேகத்திற்குள் என்னென்ன சக்திகள் இருக்கின்றன? எத்தனை வாயுக்கள் சஞ்சாரம்? அவ்வாயுக்களாலாகும் காரியங்களென்ன? மனதிற்கும் தேகத்திற்கும் சம்பந்தமென்ன? தேகசம்பந்தத்தாலல்லவா பந்தமும் மீளாத்துக்கமு முண்டாகின்றன? மனம்செட்ட வழிகளிலிழுத்துச்செல்லாமல் இதை அடக்க உபாயமென்ன? மனதையடக்கி யாளவல்லோமாகில் விஸ்ராந்தியடையலாம். இதற்கு உபாயமாக யோகசாஸ்திரத்தில் என்ன கூறியிருக்கிறது என்று இரவும் பகலும் இதே கவலையாய்த்தேடி சிலவழிகளைக் கண்டுபிடித்தும், சிறந்த யோகிகளிடத்துச்சென்று அப்பியாசம் செய்தும் காலத்தைக் கழிக்கிறார்கள். இவர்களை மூன்றாவது வகுப்பினராகிய யோகிகளெனச் சொல்லவேண்டும்.

மனிதர்களில் சிலர் தத்துவசாஸ்திர விசாரணைசெய்து ஒவ்வொருவஸ்துவையும் சோதித்து அவைகளுக்கிருப்பிடம் மனந்தான் என்று நிர்ணயம் செய்து அம்மனம் பிறந்தவிடத்தையும் அவ்விடத்தின் சொரூபத்தையும் வியாபகத்தையும் அறிந்து தத்சொரூபமாய் நிற்க முயலுகிறார்கள். இவர்கள்தான் உத்தமமான நான்காவது வகுப்பினராகிய ஞானிகள். மதமென்று ஒன்றிருந்தால் அது மேற்கூறிய வகுப்பினர்களுக்கெல்லாம் வழிகாண்பிக்கவேண்டும். மனபரிபாகத்திற்குத் தகுந்தமாதிரி எந்த வழியைக்கடைப்பிடித்தாலும் அவ்வழியிலேயே ஒருவனை மென்மேலும் கொண்டுபோய் அவன் கோரியதைத்தரும் மதமே சர்வ சிலாக்கியமான மதம். ஓர் மதமானது பக்தியைமாத்திரம் கூறுவதாயிருந்தால் அம்மதத்தை யனுசரிப்பவர்கள் பகவானைப் பாடுவதும் தங்கள் கஷ்டங்களைக்கூறி முறையிடுவதுமாகயிருப்பார்கள். அவர்களிடத்துச்சென்று ஒருவன் உங்கள் தெய்வம் எவ்வண்ணம்? நீங்கள் யார்? உங்களுக்கு துக்கம் ஏன் வந்தது? துக்கத்திற்குப் பரிகாரமென்ன? இக்கேள்விகளுக்கு சுருதி யுக்தி யனுபவங்களுக்கு ஒத்தவாறு சமாதானம் தத்துவசாஸ்திரம் நியாயசாஸ்திரமிவைகளை யனுசரித்துச் சொல்லவேண்டும் என்றுகேட்டால், காரணத்தை விசாரியாது மிக்க அன்புடன் நம்பிக்கைவைத்து பகவானிடத்தில் பக்திசெய்யும் சாதுக்களான பக்தசிகாமணிகள் என்னபதில் சொல்லுவார்கள். இவன் யாரோ குதர்க்கன். என்னென்னமோ கேள்விகேட்கிறான், இவன் நம்முடைய மதக்காரனல்லபோலிருக்கிறது என்று நினைத்து, ஐயா நும் கேள்விகளுக்கு நாங்கள் பதில் சொல்லோம். நீர் எங்கள் மதத்தைச்சேர்ந்தவரல்ல. ஆனதால் எங்கள் மதசம்பிரதாயங்கள் நுமக்குத் திருப்திகரமாயிராது. தொந்திரவு செய்பவேண்டாம். நாங்கள் பகவானைத் துதிப்பதற்கு சமயம் வந்துவிட்டது. நீங்கள்போகலாம் என்று அந்த பக்தர்கள் கூறுவார்கள். அம்மனிதன் போகும்வழியாது? அவனுக்கு வேண்டியதுஞானம். பக்திமாத்திரம் கூறும் மதம் அவனுக்குப் பயன்படாது. இப்படியே எந்த மதமானாலும் மனிதர்களுடைய பலவேறு எண்ணங்களுக்குத்தக்க எல்லா வழிகளையும் பொருந்தியதாயிருந்தாலல்லாமல் அம்மதம் நிலைபெற்றிராது. நீடித்திராது, விருத்தியுமாகாது.

எல்லாருக்கும் உபயோகமாகும்படியான மதத்தைப்பெற்றவர்கள் கர்மகாண்டிவந்தாலும், இதோ எங்கள் மதத்தில் உனக்குவேண்டியது ஏராளமாயிருக்கிறது அநேகவிதமான கர்மங்கள் இருக்கின்றன. பலவகைப்பட்ட பலன்களைக்கொடுக்கும் கர்மங்கள் அனந்தமுண்டு என்று சொல்லவேண்டும். பக்தர்கள் வந்தாலும் உங்களுக்குவேண்டிய விஷயங்கள் எங்கள்மதத்தில்பலவுண்டு. பக்தியை விர்த்திசெய்ய பலவழிகளுள. கோயில்கள் அநேகமுண்டு. இது தவிர பக்தியையனுசரித்து முக்தியடைந்தவர்கள் சரித்திரங்கள் கணக்கிலடங்காமலிருக்கின்றன. வாருங்கள், வந்து பாருங்கள். பக்தியைப்பற்றி முக்தியடையுங்கள். வேறெங்கும் போகவேண்டாம். வீணாகக்காலத்தைக் கழிக்கவேண்டாம் என்று கூறவேண்டும். யோகாப்பியாசம்செய்து யோகிகளாக விருப்பமுள்ளவர்கள் நேரிடின், யோகசாமான்யம், அடயோகம், லயயோகம், சிறந்த இராஜயோகமென்று பலயோகங்கள் எங்கள்மதத்திலிருக்கின்றன, நீங்கள் சந்தேகிக்கவேண்டாம். சித்தியடைந்த யோகிகளநேகருளர். ஒவ்வொரு விஷயத்தையும் எளிதாய்க் கற்பிப்பார்களென்று சொல்லவேண்டும். ஞானியாகவேண்டுமென்று ஆசைகொண்டு ஒருவன் வந்தாலும், ஞான விஷயங்கள் எங்கள் மதத்தைப்பார்க்கிலும் வேறு எந்த மதத்தில் அதிகமாயிருக்கிறது? ஞானத்தை விர்த்தியாக்கும் நூல்கள் பலவுள, அனுபவத்தை யெடுத்துச்சொல்லும் ஞானிகள் இருக்கிறார்கள். அவர்களோடு பழகலாம் என்று ஆதரவுடன் அழைக்கவேண்டும்.

இன்னும் எதைக்கோரி யார்வந்தாலும் அவர்களுக்கெல்லாம் வேண்டியதைக்கொடுக்கும் மதத்தைப்பெற்றவர்களே உயர்ந்த மதஸ்தர்கள். இதுதவிர எல்லா விஷயங்களையும் ஆதியோடந்தமாய் வியவகரித்து சித்தாந்தம் செய்து, எந்த புத்திமான்களானாலும் எந்த காலத்திலாவது எவ்விதமாய் வாதஞ்செய்யினும், சித்தாந்தப்படுத்திய விஷயம் தவறாகாமல், என்றைக்கும் சத்தியமாய், புராதனமாய், புனிதமாய், புதிதாய்ப், பூரணமாயிருக்கும் சாஸ்திரங்களைப் பெற்றிருக்கும் மதஸ்தர்களே மிக்கப்பெருமையுடையவர்கள். அவர்களே பொதுவான மதத்தை மேற்கொண்டொழுகுபவர்களாவார்கள். எவரெவர்கள் எதுவெது வேண்டினாலும் அவர்களுக்கு அவைகளைக்கொடுத்து அவர்களுடன் வித்தியாசமின்றிக் கலந்துவாழச்செய்தல்தான் பொதுவான மதத்தின்சிறப்பு. எந்த மதத்தில் மனிதன் கேட்கும் விஷயங்களெல்லாம் இல்லையோ அம்மதம் பூர்த்தியான மதமல்ல. அம்மதத்திற்கூறிய சிலவிஷயங்கள் சரியேயாயினும் அவைகளெல்லாருக்கும் பயன்படமாட்டாது. எல்லாரும் ஒருவழியை யனுசரிக்கமாட்டார்கள். ஆனதால் யார்யாருக்கு எதுவெது வேண்டியதாயிருந்தாலும் அவைகளைக்கொடுக்கச் சித்தமாயிருக்கும் மதமே பொதுவான மதம். எந்த மார்க்கத்தை யனுசரித்தாலும்,

அதில் ஊக்கத்துடன் இருந்து அதற்காகச்சொல்லியிருக்கும் நிபந்தனைகளைக் கைக்கொண்டு மற்றெதிலும் மனஞ்சலியாது ஒரே மார்க்கத்தில் நிற்பதுதான் யோகமென்று பொதுவாகக்கூறப்படும். யோகமென்பது ஐக்கியத்தைத் தரும். கர்மயோகிக்கு தான்வேறு, மற்ற ஜீவர்கள் வேறென்றில்லாமல், மற்றஜீவராசிகளும் தானும் ஒன்றுதான் என்கிற ஐக்கியத்தைக்கொடுக்கும். பக்தியோகிக்கு அன்போடு வழிபட்ட கடவுளுக்கும் தனக்கும் ஐக்கியத்தைத் தரும். இராஜயோகிக்கு தன் மனதை விஷயங்களில் செல்லவொட்டாமல் அடக்கி தான்மாத்திரமாய் நிற்பதால் மனதிற்கும் ஆத்மாவுக்கும் ஐக்கியத்தையுண்டாக்கும். அண்டபிண்டங்களும் சகல ஜீவராசிகளும் ஜடராசிகளும் தன்னைத்தவிரயில்லையென்றனுபவிக்கிற ஞானயோகிக்கு அன்னியமாகத்தோன்றிய உலகத்திற்கும் தனக்கும் ஐக்கியத்தைக்கொடுக்கும். கர்மம், பக்தி, ஞானயோகங்களில் ஒருவனுக்கு எது எளிதாயிருக்குமோ அதை அப்பியசிக்க வேண்டும். முதலில் அவைகளைப்பற்றி நன்றாய்க்கேட்டல்வேண்டும். கேட்டதை தனியே நியாயமாயிருக்கிறதாவென்றும் அனுபவத்தில் எப்படி யிருக்கிறதென்றும் சிந்தித்துப்பார்க்கவேண்டும். யுக்தி அனுபவங்களுக்கு ஒத்திருக்கும் பக்ஷத்தில் அப்பியாசத்திற்குகொண்டுவருவது அவசியம். அப்பியாசம்செய்து அனுபோகத்தில்கொண்டுவந்துவிட்ட பிறகு கேட்கவேண்டியதும், சிந்திக்கவேண்டியதும், அதைக்குறித்துப் பேசவேண்டியதும் அனாவசியமாகமுடியும். மதம் என்றால் பேசுதலல்ல. மதத்தில் கூறியவற்றை அனுஷ்டித்து அனுபோகிப்பதே மதம். அனுபோகமில்லாதவன் மதம் தெரிந்துகொண்டேன் எனக்கூறுவது தேன்ருசி பாராதவொருவன் புத்தகத்தில் தேன் என்னும் பதத்தைப்படித்துவிட்டு எனக்குத் தேன் தெரியுமெனச்சொல்லுதலொக்கும். மதமென்பது பேச்சல்ல. தன்னையறிந்து தானாய் நின்று, தானே எல்லாமாயும், அல்லவுமாகியும் சுகிப்பதே மதம். எல்லா ஜனங்களும் சுகமடைய வழிகாண்பிக்கும் மதமே பொதுவான மதம். யாராயிருந்தாலும், எச்சாதியாராயினும், எத்தேசத்தாராயினும், எத்தனை சாஸ்திரங்களைப்படித்து எவ்வளவு புத்திமான்களாயிருந்தாலும் எல்லாரும் மேன்மேலுமறிந்து நித்தியமான பேரானந்தத்தை யடையச்செய்வதுதான் பொதுவான மதம்.

ஆரிய நேயர்களே! எப்போதும் மததூஷணை செய்வதை விட்டுவிடவேண்டும். ஓரூரில் தமிழன், தெலுங்கன், துலுக்கன் ஆகிய மூவர்களும் கூடினார்கள். அவர்கள் ஒருவர் சொல்வதை மற்றொருவர் அறியமுடியாத வெவ்வேறு பாஷைகள் பேசியபோதிலும் ஒருவிதமான அன்யோன்யத்தை யுடையவர்களா யிருந்தனர். ஒருநாள் மூவரும் ஒன்றாக உட்கார்ந்து சாப்பிட வேண்டுமென்று நிச்சயித்து பழம் வாங்குவதாய்த் தீர்மானித்தார்கள். தமிழன் வாழைப்பழம் நல்லருசியுள்ளது அதை வாங்கிச்சாப்பிடுதல் நல்லதென்றான். தெலுங்கன் அது கூடாது அரடிபண்டுதான் சிலாக்கியமென்றான், துலுக்கன் மவுஸ்தான் சிறந்ததென்றான். இம்மூவரும் வெகுநேரம் வாக்குவாதம் செய்துகொண்டிருக்கையில் ஒரு கூடைக்காரி கூடைநிறைய வாழைப்பழம் கொண்டு சென்றாள். மூவர்களும் அதை வாங்கி ஆசையுடன் சாப்பிட்டார்கள். அதுபோல் பற்பல மதஸ்தர்கள் பஜனை பண்ணுகிற பகவான் ஒருவர்தான். வீணாக உண்மையறியாது ஒருவரோடொருவர் சண்டை செய்வதில் பயனில்லை. 'ஏகம்சத்விப்ராபஹுதாவதந்தி' அதாவது உள்ளது ஒன்றுதான், அதை ஞானிகளும் மகரிஷிகளும் பலவிதமாகச்சொல்லுகிறார்கள்.

---

## ஒளவையார் சரித்திரம்.

(முன் தொடர்ச்சி.)

ஒரு நாள் ஒளவையார் அதிகபசியால்வருந்தி, ஒரு சமுசாரி வீட்டுத் தெருத்திண்ணையில் மிகுந்த இளைப்போடு வந்து உட்கார்ந்திருந்தனர். அந்த வீட்டுக்காரன் மிகவும் யோக்கியமானவன். அவன் மனைவியோ அதிக கடுமையானவள். அப்போது வெளியே வந்த அவ்வீட்டுக்காரனை ஒளவையார் கண்டு அப்பா! எனக்கு மெத்தப்பசியாயிருப்பதால் கொஞ்சக் கூழேனும் வார்த்தால் உண்டு பசியாறிப் போவேனென்றார். சாதுவான வீட்டுக்காரன் அவருடைய பரிதாப வார்த்தைக்கிணங்கித் தன் பெண்சாதியின் குணத்தைத் தானறிந்தவனாகையால் ஒளவையாரை வீட்டிற்குள் அழைத்துக்கொண்டு போகாமல் தெருத்திண்ணையிலேயே இருக்கச்சொல்லி தான் மாத்திரம் உள்ளேநுழைந்து பிடாரியைப் பெண்டாகக்கொண்ட மனையாளிடத்திற் சென்று அவளுடைய உத்திரவின்பேரில் அருகேயிருந்து, அவளுக்கு தன்னிடத்தில் விசுவாசம் உண்டாகும்படி இச்சக வார்த்தைகளைச்சொல்லி மெல்ல முகந்துடைத்து அவளுடைய தலைசீவிச்சிக்கறுத்துப் பேன்பார்த்து ஈருருவி அதிக பயபக்தியுடனே எங்கே கோபித்துக்கொள்ளுகிறாளோ என்று பயந்து சமயம் பார்த்து மெய் நடுங்கி நாக்குழறி மெல்ல உதடோடுதடசைய ஒரு கிழவி கொஞ்சங் கூழுக்கு வந்திருக்கிறாளென்று சொன்ன மாத்திரத்தில், அவள் தீயில்விழுந்த நாகம்போலச் சீறி கழுநீர்ப்பானையை யேந்திவந்து அவன் தலையிலபிடே

கஞ்செய்து அவனை வீட்டிற்குந் தெருவிற்குமாகத் துரத்தித்துரத்தி அடித்தாள். அப்போது அவ்வீட்டுத் தலைவன் பெண்டாட்டியால் திண்டாட்டப் படுவதைக் கண்ட ஒளவையார் மனமிரக்கமுற்று—

இருந்து முகந்திருத்தி யீரோடுபேன் வாங்கி
விருந்து வந்ததென்று விளம்ப - வருந்திமிக
ஆடினாள் பாடினா ளாடிப் பழமுறத்தாற்
சாடினா ளோடோடத் தான்.

என்னுஞ் செய்யுளைப் பாடினார். அதுகேட்ட வீட்டுக்காரன் கூறிரந்தவர் வித்வசிரோமணியென்றறிந்து தனது மனையாளை வேண்டிக்கொள்ள அவள் சற்றிரங்கி ஒளவையாரை உள்ளே வருவித்து அன்னமிட அப்போது ஒளவையார்—

காணக்கண் கூசுதே கையெடுக்க நாணுதே
மாணொக்க வாய்திறக்க மாட்டாதே-வீணுக்கென்
என்பெல்லாம் பற்றி யெரிகின்ற தையையோ
அன்பில்லா ளிட்ட வமுது.

என்றோர் கவி பாடிக்கொண்டெழுந்து வெளியே வந்து தம்மை வணங்கிய அவ்வீட்டுக்காரனை நோக்கி அவன் இவ்வாழ்க்கையை இகழ்ந்துபேசி அவன் அதுமுதல் துறவு பூண்டொழுகும்படி அடியில் வரும் செய்யுட்களைப் பாடியருளினர்.—

சண்டாளி சூர்ப்பனகை தாடகையைப் போல்வடிவு
கொண்டாளைப் பெண்டென்று கொண்டாயே-தொண்டா
செருப்படிதான் செல்லாவுன் செல்வமென்ன செல்வம்
நெருப்பிலே வீழ்ந்திடுத னேர்.

பர்த்தாவுக் கேற்ற பதிவிரதை யுண்டானால்
எத்தாலுங் கூடி யிருக்கலாம் - சற்றேனும்
ஏறுமா றாக விருப்பளே யாமாயின்
கூறாமற் சந்நியாசங் கொள்.

இதன் அர்த்தம் என்ன வென்றால் மனைவி கணவன் கருத்திற்கிசைய நடப்பவளும் பதியைப் பரனாகக் கருதத்தக்கவளுமாத்திர மிருப்பாளாயின் அக்கணவனுக்குத் தரித்திரம், நோய் முதலிய வியாகூலங்கள் எவ்வளவாயினும் அவை எள்ளளவும் வருத்தந் தாராதாகலின் இல்வாழ்க்கையிலேயே யிருக்கலாம். அப்படிக்கின்றி அவள் கொஞ்சமேனும் நாயகனுக்கு எதிருத்தரஞ் சொல்லத்தக்கவளாயின் எவ்வளவு சம்பத்திருந்தாலும் ஒன்று மில்லாததாகு மாதலால் யாரோடுஞ் சொல்லாமலோடிச் சந்நியாசம் வாங்கிக் கொள்வதே தகுதி.

திட்டமாக நிதிதேடு மன்னவனும்
இட்டதனை மெச்சா விரப்போனும்—முட்டவே
கூசிநிலை யில்லாக் குலக்கொடியுங் கூசிய
வேசியுங் கெட்டு விடும்.

பழிக்கஞ்சாது இறைவாங்கு மரசனும் கிடைத்த மட்டில் திருப்தியடையாத பிச்சைக்காரனும் பரபுருஷரைக்காணக் கூச்சமென்பது சிறிதுமில்லாத குலமாதும் கூச்சமுடைய விலைமாதும் ஒருக்காலும் க்ஷேம மடையார்கள்.

ஏசி யிடலி னிடாமையே நன்றெதிரிற்
பேசு மனையாளிற் பேய்நன்று—நேசமிலா
வங்கணத்தி னன்று வலியபகை வாழ்வில்லாச்
சங்கடத்திற் சாவதே நன்று.

ஏசியிடுதலினும் இடாமையே நல்லது, கணவன் மொழிக்கு எதிர்த்து பதில்சொல்லும் மனையாளினும் பிசாசமேநல்லது, நேயமில்லாத் தோழமையினும்வலிய பகையேநன்று வாழ்வில்லாத சங்கடத்தினுஞ் சாவதே நன்று என்பதாம்.

ஒருநாள் சோழராஜன் தன்சமஸ்தான வித்துவான்களை யழைப்பித்து மறுநாளுதயத்திற்கு நாலுகோடிக்குப் பாடல்பாடி வரவேண்டுமென்று ஆக்கியாபித்தான். அதைக்கேட்ட அவ்வித்துவான்கள் நாலுகோடிக்கு எங்ஙனம் பாடுவதென ஒன்றுந்தோன்றாது அதிக வியாகூலத்துடனே அவரவர்கள் வீடுபோய்ச் சேர்ந்தார்கள். ஒளவையார் அவ்வழியாக வரும்போது அவர்கள் விசனமுற் றிருப்பதைக்கண்டு ஏன்முகவாட்டத்துட னிருக்கிறீர்கள் என்று கேட்க, அவர்கள் அம்மணி! எங்களைச் சோழன் நாளைய உதயத்திற் குள்ளே நாலுகோடிக்குப் பாடல்கள் பாடிவரும்படி ஆக்கியாபித்திருக்கிறான். இன்னும் ஒருபாட்டிற்குக் கூட வழியில்லை. ஆதலின் இன்றிராத்திரிக்குள் நாலுகோடியெவ்வண்ணம் பாடப்போகிறோமென்று திகைத்திருக்கின்றோம் என்றனர். அதைக்கேட்டு ஒளவையார் வருந்தாதிருங்கள் நானிதோ ஓர்நொடியிற் பாடித்தருகிறேனென்று பின்வரும் பாடலைப் பாடிக்கொடுத்தனள்.

மதியாதார் முற்ற மதித்தொருகாற் சென்று
மிதியாமை கோடி பெறும்.
உண்ணீருண் ணீரென் றுபசரியார் தம்மனையி
லுண்ணாமை கோடி பெறும்.
கோடி கொடுத்துங் குடிப்பிறந்தார் தம்மோடு
கூடுதல் கோடி பெறும்.
கோடானு கோடி கொடுப்பினுந் தன்னுடைநாக்
கோடாமை கோடி பெறும்.

இதைக்கேட்டவுடனே சூரியனைக்கண்ட தாமரைபோல் முகமலர்ந்து அப்பாடலைப் பெற்றுக் கொண்டுபோய் அரசன் முன்வைத்தனர். அவனுமதைக்கண்டு ஆனந்தங்கொண்டனன்.

(இன்னும்வரும்.)

## மனோகரன்.

(முன்தொடர்ச்சி.)

---

அரசன்—அதைச்சொன்னால் போதுமானது.

மனோகரன்—நீங்கள் க்ஷத்திரிய வமிசத்தைச் சேர்ந்தவர்கள். பெரிய இராஜாங்கத்தை நடத்துபவர்கள். இதுவரைக்கும் எனக்குசந்தேகமில்லை. இனி எந்த இராஜாங்கம் பெயரென்ன வென்றால் என்னால்சொல்லமுடியாது.

இதைக்கேட்ட மந்திரி இனி அதிகமாய் மனோகரனிடத்துப் பேசுவதுமோசமாய்முடியுமென்று எண்ணி அரசனைப்பார்த்து அரசர்களுக்கு யாரைக் கண்டாலும் அரசர்களைப்போலத்தான் தோன்றும். இதென்னநியாயமென்று சில அர்த்தமில்லாத வார்த்தைகளைச்சொல்லி, மனோகரனைப் பார்த்து, நாங்கள் க்ஷத்திரியர்களுமல்ல, இராஜாக்களுமல்ல, நாழிகையாகிறது நீங்கள்போகலாம் நாங்கள் வியாபாரிகள். உங்களை இத்தனைநேரம்நிறுத்தி வைத்ததற்கு எங்களை மன்னியுங்கள் என்று சொன்னான்.

மனோகரன்— இன்னும் நீங்கள் உங்கள் வேஷத்தையே ஸ்தாபிக்கிறீர்கள். வேண்டுமானால் உங்களை யின்னாரென்று ஊர்பெயருடன் உங்கள் வாயிலிருந்து வரவழைப்பேன். இந்தவேஷம் எங்கள் நிமித்தம் போட்டீர்களோஅல்லவோவென்றுசிறிது சந்தேகமிருப்பதால் உங்களைசும்மா விடுத்தேன் என்று கோபித்தவன்போல் நடித்து சொல்லும்போது அவன் வலது கையானது இடுப்பில் கட்டித் தொங்கும் வாளாயுதத்தைக் கிட்டியது.

மனோகரன் பேசியதை யறிந்த மந்திரி தங்கள் நிலைமையை அறிந்து பேசாது சும்மாயிருக்க மனோகரனும் சந்திரசூடனும் தங்கள் குதிரைகளைத்தட்டிவிட்டார்கள். சத்தியபுரிக்கு அருகாமையில் போய்க்கொண்டிருக்கும் போது சந்திரசூடன் மனோகரனை நோக்கி "ஏன் அண்ணா அவர்களிடத்து அவ்வளவு கோபம் வந்தது?" அவர்கள் தங்களை மறைத்துச்சொல்வானேன்? நம்மிடத்தில் ஏதோ சூதுசெய்ய வெண்ணியிருப்பார்கள். நாம் அப்படி ஏமாந்து போகிறவர்களல்லவென்று காண்பித்துவிட்டால் அதன்மேல் அவர்கள் பிரயத்தினம் அவலமாய்ப்போய்விடும். ஒரு மனிதன் நம்மை கேள்விகள் கேட்கும்போதே எந்த கருத்துடன் கேட்கிறானென்று நாம் அறிந்த பின்னரே அம்மனிதனுக்குப் பதில் சொல்லவேண்டும். இந்த நியாயத்தை நீ ஞாபகம் வைக்கவேண்டும் சந்திரசூடா என்று மனோகரன் பதிலளிக்க, ஆமாம் நான்கூட முதலில் அவர்களைக் குறித்து சில சந்தேகங்கொண்டேன். ஆனால் அவர்கள் ஏதோ கேள்விகேட்கவே அதற்குப் பதில் சொல்லுவதில் மறந்தேன், என்றுசந்திரசூடன்சொல்ல, என்ன அவர்கள் தர்க்க நியாய சாஸ்திரங்களைக் கேட்டுவிட்டது, அதற்கு தீர்க்கமா யாலோசித்து சரியான பதில் சொல்லுவதில் அவர்களிடத்து வந்த சந்தேகங்களை மறந்துவிட்டது, எனக்கு ஒன்றுந்தெரியவில்லை. நான் அநேக தரம் உனக்கு சொல்லியிருக்கிறேன் சந்திரசூடா. நீ அதை மறந்துவிடுகிறாய். யார் என்ன கேள்வி கேட்டாலும் யோசித்து தான் பதில் சொல்லவேண்டும். யோசிப்பதில் அதிக தாமதமும் கூடாது. மரியாதைக்கு குறைவில்லாமல் உடனே பதிலும் சொல்லவேண்டும். நம்மையும் காப்பாற்றிக் கொள்ளவேண்டும் என்று மறுபடியும் மனோகரன் சொல்லிக்கொண்டுபோகையில் சத்தியபுரியில் வந்து சேர்ந்தார்கள்.

அன்றையதினம் போஜனஞ் செய்தபிறகு மனோகரன் தனியே ஓர் அறையில் படித்துக்கொண்டிருந்தான். அன்று காலை காட்டில் இருவர் பேசியதை மறுபடியும் யோசிக்கலானான். அவர்கள் வேஷம் போட்டிருந்த போதிலும் நல்ல விவேகிகளாகிய க்ஷத்திரியவரசர்கள். அவர்கள் சந்திரசேகர பிரபுவை நன்றாய்த் தெரிந்தவர்கள்போலக் காண்கிறது. நமது பிதாவுக்கு ஒரு பிள்ளையும் ஒரு பெண்ணுந் தானே யென்று ஏன் கேட்கவேண்டும். இதில் ஏதோ இரகசியமிருக்கிறது. இதே மாதிரியாக முன்னொருநாள் சத்தியபுரியிலேயே கேள்விப்பட்டேன். இந்த சங்கதி யின்னதென்று நான் கூடியசீக்கிரத்திலறியவேண்டும். இவ்விடத்திற்கு அடிக்கடி வருகின்ற இராமதாசர் நம்மிடத்து அதிகப் பிரியமாகவிருக்கிறார். அவர் பழைய கதைகளெல்லாம் அடிக்கடி சொல்லுகிறார். அவர் எல்லாந் தெரிந்தவர். அவரைத்தான் கேட்கவேண்டும் என்று மனோகரன் எண்ணினான். உடனே சம்பாதி மனோகரனிருக்கும் அறைக்கு வந்து ஐயா! இன்றைக்கு ஏன் தாங்கள் குருவினிடத்துப் படிக்கப் போகவில்லை? சந்திரசூடன் மாத்திரம் போனாரே என்று கேட்டான். இன்றைக்கு வேட்டையாடி வந்தது முதல் எனக்கு உடம்பு சிறிது சௌக்கியமில்லை யாதலால் நான் போகவில்லை என்று பதில்கூறி, சம்பாதி இவ்வரண்மனையில் நெடுநாளாயிருக்கிறவன், இவனைக் கேட்கலாமாவென்று மனோகரன் யோசித்தான். இதைக்கண்ட

சம்பாதி ஐயா நீ ரென்னமோ யோசிக்கிருப்போல் தெரிகிறது. அந்த யோசனை யானது தங்கள் மனதை வேறெந்த வேலையிலும் போகவிடவில்லை யெனவும் அறிகிறேன். ஏதாவது அப்படி யுண்டா? என்று கேட்க, மனோகரன், நீ சொல்லியது உண்மையே சம்பாதி! நான் இன்றைக்கு உன்னை ஒன்று கேட்கப்போகிறேன். அதற்கு உண்மையான விஷயம் எதுவோ அதைச்சொல்லவேண்டும் என்று சொன்னான்.

''மனோகரன்''—உன்னுடைய சந்திரசேகர பிரபுவுக்கு எத்தனை குமாரர்கள்? எத்தனை பெண்கள்?

'சம்பாதி''—இதுதானா? நீங்கள் என்னமோ கேட்கப் போகிறீர்களென்று இருந்தேன். இது உங்களுக்குத் தெரியாதோ இரண்டு பிள்ளைகளும் ஒருபெண்ணுந்தான்.

''மனோகரன்''—இது எனக்குத் தெரிந்த விஷயமே. ஆனால் சிலஜனங்கள் ஒரு பிள்ளையும் ஒரு பெண்ணும் தானுண்டு என்று சொல்ல நான்கேட்டேன். அதிலென்னவோ இரகசிய மிருக்கிறது. அது நீ எனக்குச் சொல்லவேண்டும்.

''சம்பாதி''—எனக்குத் தெரிந்தவிஷயத்தை உங்களுக்குச் சொல்லவேண்டியதென் கடமை யாயினும், சந்திர சேகரப் பிரபுவின் கட்டளைப்படி நான் நடந்து கொள்ள வேண்டுமே.

''மனோகரன்''—ஹே சம்பாதி! நீ என்னிடத்தில் எதையும் பயமின்றிச் சொல்லலாம். அதனால் உனக்கு ஒரு திங்கும் வராவண்ணம் காப்பாற்றுகிறேன். உடனே சங்கதியைச் சொல்.

''சம்பாதி''—அப்படியல்ல பிரபுவின் உத்திரவு கடந்து இதுவரைக்கும் நான் நடந்ததில்லை. ஆனால் நான் ஒன்று சொல்லுகிறேன். பம்பாநதிக் கரையோரமாய் ஒரு சிறிய தோட்டமிருக்கிறது. அதில் உள்ளபேர்வழி உங்களுக்கு இந்த விஷயத்தைச் சொல்லலாம்.

''மனோகரன்''—இராமதாசர்தானே.

''சம்பாதி''—ஆமாம்.

''மனோகரன்''—''அதைநான் முன்னமே யோசித்திருக்கிறேன்; சரி, நீ சொல்லாமற்போகிறாய்'' என்று சொல்லி சம்பாதியின் குணாதிசயத்திற்கு சந்தோஷப்பட்டு சம்பாதிக்கு விடைகொடுத்தனுப்பிவிட்டான்.

அன்று சாயந்திரம் பம்பாநதியை நோக்கி மனோகரன் தனியேசென்றான். அவ்வாற்றின் பக்கமாயுள்ள சிறியதோட்டத்தில் ஒருபெரியவர் உலாவிக் கொண்டிருந்தனர். மனோகரன் அத்தோட்டத்திற்குள் சென்று அப்பெரியவரை நமஸ்கரித்து நின்றான். பெரியவரும் உடனே மனோகரனை அதிகமரியாதையுட னழைத்துக் கொண்டுபோய் ஆசிரமத்தில் ஒரு ஆசனத்திலிருத்தி தானும் எதிரே உட்கார்ந்துகொண்டு மனோகரனது க்ஷேமத்தைவிசாரித்து அவனுடன் பேசவாரம்பித்தார்.

சில நாள் சென்றபின் சந்திரசேகர பிரபு தன் அரண்மனையில் சுதந்திரனுடன் பேசிக்கொண்டிருக்கையில் மகத இராஜாங்கத்துச் சேவகன் வாசற்படியில் காத்துக்கொண்டிருக்கிறானென்று ஒருவன் வந்து பிரபுவின் முன்னின்று சொன்னான். ஹே சாம்பா! உள்ளே அழைத்துக்கொண்டு வாயென்று பிரபு உத்திரவளிக்க சாம்பன் அவ்வாறே அச்சேவகனை உள்ளே யழைத்து வந்தான். இராஜாங்கத்துச் சேவகன் பிரபுவின் முன் வந்து நமஸ்காரஞ்செய்து தான் கொண்டுவந்த கடிதத்தை பிரபுவினிடத்துக் கொடுத்தான். சந்திரசேகரர் கடிதத்தைப் பிரித்துப் படிக்க வாரம்பித்தார். படித்துக் கொண்டு வரும்போது அவரது முகம் திடீலென்று மாறுதலையடைந்து சிறிது விசனத்தையும் கோபத்தையுங் காட்டிற்று. கடிதத்தைப் படித்து முடிக்கும்போது இவர்கள் வழக்கம் இதுதா னெப்போதுமென்று சொல்லிக்கொண்டு அக்கடிதத்தை மந்திரியினிடத்துக்கொடுத்தார். மந்திரி அதை முழுதும் படித்து பிரபுவின் முகம் மாறுதலையடைந்ததற்குத் தகுந்த காரணமிருக்கிறதென் றறிந்தான். பிரபுவானவர் சிறிது நேரம் சும்மாயிருந்து மந்திரியை நோக்கி, ''காரணமில்லாது அரசன் இப்படிச்செய்வது என்ன நியாயம்?'' என்றார். மந்திரி, இந்த அரசன் எப்போதும் இப்படித்தான். அரசனிட்டது சட்டமென எண்ணியிருக்கிறான். காரணமிராது. நியாயமிராது. பின்னால் காரணஞ் சொல்லப்படுமாம். அது எப்போதோ? ஊரையெல்லாம் பிடித்துக்கொண்டு நிராதரவாக்கின பிறகோ? என்று கடிந்து பேசினான். ''அரசனுக்குப் பலமிருப்பதினால் தர்மத்தைக் கை சோரவிட்டு அதர்மத்தை நடத்துகிறான். இவனது தேசத்தில் ஓர் சிற்றரசனாயிருப்பதைக் காட்டிலும் சாதாரணமான ஓர் ஏழைக்குடியாயிருப்பது நலம்.

(இன்னும்வரும்)

## அன்பு.

முன் தொடர்ச்சி,)

அவ்வண்ணம் வணங்குவோமாயின் நமது வைதிக சமயோத்தாரணஞ் செய்த சமயகுரவர்கள், சந்தானாசாரியர்கள் முதலாய திருவருட்பெருஞ் செல்வர்கள் அடைந்த பெரும் பயனை யாம் அடைவோமென்பதற் கையமுண்டோ! ஆகவே மேற்கூறிய பெரியோருள் ஒருவராகிய வாதவூரடிகள் விஷயத்தில் அன்பு செலுத்தக்கூடாத ஆங்கில நாட்டினரும் அவர் திருவாய் மலர்ந்தருளிய திருவாசகத்தினது அருமை பெருமை யறிந்து "திருவாசகத்திற்குருகாதார் ஒரு வாசகத்திற்கு முருகார்" என்பதாகவே ஆங்கிலத்திலும் அச்சாத்திரமாகிய தோத்திரத்தை மொழிபெயர்த்தருளினர். இத்துணைச் சிறப்பு வாய்ந்த பெரியோராகிய ஆளுடைய வடிகள் அன்பின் பெருக்கை விளக்கவேண்டி அன்புடையரிற் சிறந்தாரின்னாராவாரென்றும், அன்பில்லாதாரில் யானே யென்றும் தமது திருவாசகத்தில் எடுத்துக்காட்டினர். அதுவருமாறு:—

"கண்ணப்ப னொப்பதோ ரன்பின்மை கண்டபி [ருளி
னென்னப்ப னென்னொப்பி லென்னையுமாட் கொண்ட
வண்ணப்பணித் தென்னை வாவென்றவான் கருணைச்
சுண்ணப்பொன்னீற்றற்கே சென்றூதாய் கோத்தும்பீ."

இதுவொன்றோ. ஷை மணிவாசகப் பிரபு கூறிய கருத்தை விதந்தோதுகின்றார் திருக்களிற்றுப்படியார்,

கண்ணப்ப னொப்பதோ ரன்பின்மை யென்றமையால்
கண்ணப்ப னொப்பதோ ரன்பதனை - கண்ணப்பர்
தாமறிவார் காளத்தி யாரறிவா ரல்லதுமற்
றாரறியு மன்பன் றது."

இவ்வாறு அன்பின் பெருக்கத்தைக் கூறப்போந்த பெரியோரெல்லாம் கண்ணப்ப நாயனாரையே சுட்டிக் காட்டலினாலும், திருக்களிற்றுப்படியார் கூறிய திருவெண்பாவினாலும் சாக்ஷாத் உடையவரே (பரமேஸ்வரரே) நமது கண்ணப்பர் என்பதாக விளங்குகின்றது. ஆகையால் அத்தகைய கண்ணப்ப நாயனாரது திவ்ய சரித்திரத்தைச் சங்கிரகமாக விவகரிப்போமாக.

கண்ணப்பநாயனார் சரித்திரம்:—

பூவுலகின்கண் "தொண்ணீர்வயற்றொண்டை நன்னாடு சான்றோருடைத்து" என்பதற்குத்தக்க ஆன்றோர்கள் நிறைந்த தொண்டைவள நாட்டின்கண் விளங்கிய 32 - திவ்ய க்ஷேத்திரங்களி லொன்றாகியும், பஞ்சபூத தலங்களில் வாயு க்ஷேத்திரமாகியும், தென் கைலாயமெனப் புகழ்ந்தோதப்படும் புண்ணிய சிவதளியாயும், பூர்வம் சிலந்தி, பாம்பு, யானை இவைகளால் பூசிக்கப்பட்ட காரணத்தினால் சீகாளத்தியெனப் பெயர்பெற்றதாகிய திருப்பதிக்குச் சமீபமாக "நாவலர் புகழ்ந்து போற்று நல்வளம் பெருகிநின்ற பூவலர் வாவி சோலை சூழ்ந்த போத்தப்பி நாடு" என ஒரு நாடுளது. அத்திருநாட்டின்கண் முத்துக்களை வாரிக்கொண்டு வருகின்ற அருவியோடு கூடிய மலைப்பக்கங்களையுடைய உடுப்பூரென்னும் நகரத்தில் மைக்குழம்பு திரண்டாற்போன்ற உடம்பினையும், கொடிய கொலைத்தொழிலையும், தம்மிடத்து பயமும், பிறவுயிர்மே லருளும் எந்நாளும் இல்லாதவராயும், வலிய தோலுடையை உடையவர்களாயும், காடுகளில் தேடி எடுக்கும் தேனையும் விலங்குகளின் தசையோடு கூடிய மலைநெல் முதலிய வற்றாலாகிய சோற்றையும் உணவு கொள்பவராயும், நஞ்சுபோலும் அழல் வீசுகின்ற அம்புகளையுடையவராயும் ஆகிய வேடர்களுக்கு அரசனாகிய நாகன் என்பான் இயல்பால் தவத்தை முற்பிறப்பின் சார்பால் செய்தவனாயினும், தான் பிறந்த வேடச்சாதியின் ஒழுக்கத்தால் குற்றமே குணமாகக்கொண்டு கொடுமை செய்தலையே முதன்மையான தருமமெனக் கருதி விற்றொழிலிலும் வலிமையிலும் மேன்மையுற்று கொடிய கோபத்தையுடைய ஆண் சிங்கத்தை யொத்தவனாய் விளங்கி அரசுரிமைக்குரிய வாழ்க்கைத் துணையாகிய தத்தையென்னும் மனையாளோடு இல்லறம் நடாத்தி வருங்காலத்து அவனுக்கு எல்லாச் செல்வமு நிறைந்திருந்தும் புத்திரப்பேறு ஒன்றே அரியதாயிருந்தது. அதனிமித்தம் முருகவேளைத் துதித்து திருவிழா எடுக்க அவர் கிருபா நோக்கத்தினால் ஒரு புத்திரனைப்பெற்றனர். அவ்விடத்து புத்திரோச்சவம் கொண்டாட வந்த வலிய வேடுவர் மகிழ்ச்சியால் ஆரவாரித்து "அண்ணலைக் கைபிலேந்தற் கருமையாலுரிமைப் பேருந் திண்ணனென்று" நாமகரணஞ் செய்து கண்ணினுக்கு அலங்காரமாக தம் மரபுக்குரிய பல ஆபரணங்களையு மணிவித்தார்கள்.

நாகனார் தமது அருமைப் புதல்வனாகிய திண்ணனாருக்கு "வருமுறைப் பருவந்தோறும்" சிறப்பாகவே தெய்வத்திருவிழா தனது சுற்றத்தார் களிகூற நடத்து வாராயினர். இவர் இவ்விதமாகதால், சப்பாணி முதலிய பருவங்கள் கடந்தவராய் பல அற்புதமாகிய திருவிளையாடலைப் புரியா நின்றார். அவர் தந்தையும் மைந்தனாரை நோக்கி தன் திண்ணிய புயத்தாற்றலுவி வில் வித்தைபயிற்றுவதற்கு ஆய சிலமுதியோரை யழைத்து

சுபதினத்தைக் குறித்து தமது மரபினராய மறவர்க்குச் சொல்லிவிட்டான். அவரது பணியைச் சிரமேற்கொண்டவராகிய வேடுவரெல்லாம் தமது அரசகுமாரனுக்கு வரிசையாக மலைபடுமணியும், பொன்னுங், தாளமும், வேங்கைப்புலியின் றோலும், கொலைபுரி களிற்றின் கோடும், மயிற் பீலியின் குவையுந், தேனுங், கெடாத பலவகையான மதுமாமிசங்களும், பழங்களுங், கிழங்குகளுந் திசைதொறும் நெருங்கவைத்தார்கள். இத்துணைச் சிறப்புடனே வேடுவர் பெருமானாய திண்ணனூர் தனுர்வித்யாரம்பஞ் செய்து மிக்க வல்லவராய் விளங்கி தனது தந்தையார் வயோதிகத் தன்மையைக் கருதி அவரது ராஜரீகத்தைத் தன் புயாசலத்தின்மே லிறக்கிக்கொண்டு "குடிதழீஇக் கோலோச்சு மாநிலமன்ன, னடிதழீஇ நிற்கு முலகு."

என்னும் வேதவாக்கியத்திற்கிணங்க தன்னாலும், தன் பரிசனத்தாலும், பகைவராலும், கள்வராலும், மிருகங்களினாலும் குடிகளுக்கு உண்டாகக் கூடிய ஐந்துவித பயத்தையும் நிவிர்த்திக்கும்படி எழுந்தருளிய நமது திண்ணனூர் குடிகளினது முறைப் பாட்டிற் கிணங்கி சுபதினத்தில் காடன் நாணன் என்னும் உயிர்த்தோழரோடு ஏனைய வேடுவ குழாங்களுடன் வலை முதலிய கருவியாதிகளை எடுப்பித்துக்கொண்டு தன் தந்தையை வணங்கி, முதியோரால் ஆசீர்வதிக்கப் பெற்று சுபசகுணம் வாய்க்கவே எமதைபர் வேட்டையாட வெளிப்போந்தனர்.

(இன்னும்வரும்.)

# NEWS AND NOTES.

(From The Maha Vigada Thoothan.)

ஐதராபாத்திலிருந்து 61-மைமயில் தூரத்திலுள்ள பாடின் கிராமமட்டும் புதியரெயில்வே லயனென்றுதிறக்கும்பொருட்டு, ஸ்டேட் செக்ரிடெரியவர்கள் உத்தரவளித்திருக்கின்றனர்.

---

அமெரிக்காவைச் சேர்ந்த நியூயார்க்கிலுள்ள எல்லாக்கட்டடங்களிலும் பெரிதான கட்டட மொன்றிருக்கிறது. இது 29-அடுக்குகளாய்க் கட்டியிருப்பதைப் பற்றி இதில் 1125- ஆபீசுகளிருக்க 6000-பேர் பிரதி தினமும் வேலைசெய்து வருகின்றனர்.

---

கடந்த வாரத்தில் இந்தியா முழுமைக்கும் உண்டான பிளேக் கேசின் மொத்தம் 1362-ஆனால் கடந்த வருஷத்தின் இதேவாரத்தில் உண்டானதொகை 1684. மேற்கூறியுள்ள முதலாவது தொகையில் பஞ்சாபில் மாத்திரம் உண்டான தொகை 390-ஆம்.

---

ஆக்ராவில் நர்ஸாக இருந்த சுதேசஸ்திரீயொருத்தி சிறு குழந்தையொன்றின்வாயில் எதை முன்னிட்டோ கல்லைத்துருத்தி அதைக்கொன்று விட்டதால் பிடிக்கப்பட்டிருக்கின்றனள். இவளை யென்னவொரு மூடமென்னலாம்.

---

பிரிட்டிஷ் தபால் இலாக்கா தற்போது ஓர் வித மின்சார யந்திரத்தைக் கண்டுபிடித்திருக்கிறது. இவ்யந்திரம், மனிதனொருவன் ஒரு மணி நேரத்தில் 2500 கடிதங்களுக்கு முத்திரை குத்துகிறதைவிட 20,000, அல்லது 30000-கடிதங்களுக்கு முத்திரை குத்திவிடுகிறதாம். இது புத்தியின் விசால காலமன்றோ.

---

காக்கேஷிய மலைச்சார்பைபடுத்த விலாயெட் என்கிற பட்டணத்தில் கடந்த வாரத்திலுண்டான பூமியதிர்ச்சியால், 23-கிராமங்கள், 249-மனிதர், 237-ஸ்திரீகள், 299-குழந்தைகள் ஆகமொத்தத்தில் 785-பேர் கொலையுண்டதோடு வெகுவான கால்நடைகளும், வீடுகளும், ஷாப்புகளும், ஆலைகளும், மசூதிகளும், கோவில்களும், ஆஸ்பத்திரிகளும் கடைசியாக எல்லாமுமே நாசமாகி விட்டனவாம். அட, பாவமே.

---

மாட்சிமைக்குரிய நமது சக்கரவர்த்தி யவர்களின் பிறந்நாள் உற்சவத்தின்போது கனந்தங்கிய மதுராஸ் கவர்னரவர்கள், அவருக்கு வந்தனோபகார வாழ்த்துதலாக "மதுராஸ் பிரசிடென்சியின் குடிகளனைவரும், உமது நீடியக்ஷேமத்தைக்கருதி வாழ்த்து கூறுகின்றனரென்று" தந்திவிடுக்க, சக்கரவர்த்தியவர்களும் அதற்கு மறுத்தரமாக "என் பிறந்நாள் உற்சவத்தை முன்னிட்டு வந்தனோபசாரமாக அனுப்பியதந்திக்காக நான் உம்மையும் மதுராஸ் குடிகளையும் விரும்புகிறேனென மறுதந்தி யனுப்பினர்.

---

ஸ்பெயின் தேசத்திலும் விசேஷமாய் மட்ரிட் நகரத்திலும் தற்போது பிச்சையிரக்கும் பிள்ளைகளின் கோஷ்டங்கள் பெருகிப்போய் ஜனங்களுக்குத் தொந்தரை கொடுத்து வருகிறதைத் தெரிந்த ஸ்பானிய கவர்ண்மெண்ட், அவ்வாறு பிள்ளைகளைப் பிச்சை யிரக்க

வும், பாதைகளிலெல்லாம் படுத்துக்கொண் டிருக்கவும் விட்டு வருகிற தாய்தந்தையர்களைப் பிடித்து அபராத மாவது அல்லது சிறைச்சாலையிலாவது போட்டு அவ் வழக்கத்தை யெடுக்கவேண்டி உத்தரவொன்றைப் பிற ப்பித்திருக்கிறது. இது ஒருவாறு நலந்தான்.

---

பிச்சையெடுத்த தற்காக ஒருவனைப் போலீஸார் ஹாலிபாக்ஸ் பெஞ்சு நீதிவிசாரணையில் நிறுத்தி அவன் 2000-பவுன் ஆஸ்தியுள்ளவனென்று குற்றஞ்சாட்டினா ர்கள். குற்றவாளியின் மருமகனும் அவ்விதமேசொல்ல அவனைப் பிச்சையெடாதபடி தடுப்பது கடினமென் றும் சொன்னான். ஷ யான் மத்தியானம் பிச்சைக்குத் துவக்கிச் சட்டைச்சாக்கின் நிறைய நாணயங்களோடு இரவுக்கு வீட்டிற்குவந்து சேருவானாம். நீதிவிசாரணை யில் ஷ யானை மருமகனிடம் பிச்சைக்கு போகாதபடி வற்புறுத்தி விட்டார்களாம்.

---

பம்பாயில் ஜம்பூஸர் என்னுமூரில் அதிக ஆபர ணங்களுடையளாய் ஓர் பெண் தனியே வாழ்ந்து கொ ண்டிருந்தனள். இவளது நகைகள்மீது காதல்கொண்ட மற்றோர் பெண் தந்திரமாய் அப்பெண்ணைத் தன்வீட் டுக்கழைத்துச் சென்று அவளைக் கொன்று நகைகளை யெடுத்துக் கொண்டு பிரேதத்தை வைக்கோற் போரில் மறைத்துத் தீக்கொளுத்திவிட்டதால் தீவாந்திரசிக்ஷை பெற்று அந்தமான் தீவுக்கு அனுப்பப்பட்டாளாம்.

---

விரோனிகா என்னும் கப்பலின் மாலுமிகள் நடுச் சமுத்திரத்தில் கப்பல் போய்க்கொண்டிருந்த போது அதிலிருந்த தலைவனையும் மற்றும் உரிமையாளர்களை யும் கொன்று சமுத்திரத்திலெறிந்துவிட்டு கப்பலையும் கொளுத்திவிட்டுச் சிறுபடகிலேறிக் கரைவந்து சேர்ந் தார்கள். அவர்களோடுவந்த சமையற்காரனாகிய நீக்ரோ வன் உண்மையைச் சொல்லவே நீதிஸ்தல தீர்ப்பின் படி இருவர் விடுதலையானார்கள். வாலிபனாயிருந்த மா லுமி யொருவனுக்கு முதலில் தூக்குத்தண்டனை விதிக் கப்பட்டு, பின்பு வேறுசிட்சையாக மாற்றப் பட்டது. மற்றவர்களுக்குத் தூக்குத்தண்டனை விதிக்கப்பட்டது.

---

புதுவை, சந்திரநாகர், காரைக்கால் ஆகிய இவ் விடங்களில் கன்னியாஸ்திரிகளின் பார்வைக்குள் 55 வருஷகாலமாயிருந்த பெண்பாடசாலைகளில் ஸ்தாபகம் செய்யப்பட்டிருந்த வேத சின்னங்களை எடுத்துவிடச் சொல்லிப் பிரான்சு கவர்ன்மெண்டா ரிடத்திலிருந்து வந்த உத்தரவின்படி அவர்கள் அந்தச் சின்னங்களை யெடுக்க மறுத்ததின்மேல் பள்ளிச்கூடத்தை முழுவ தும் எடுத்துவிட வெகு ஜரூராய் உத்தரவு வரவும் கன்னியாஸ்திரிகளனைவரும் வெகு துக்கா கிராந்தராய்ப் பிரிந்துபோனதன்றி இனித் தங்கள் சொந்தத்தில் பள் ளிக் கூடங்களைத் திறக்க உத்தேசித் திருக்கின்றனர். இனி இவர்கள் திறக்கப்போகும் பள்ளிக்கூடங்களுக்கு பூர்வீக குடும்பங்களாய் இருக்கும்நபர்கள் தங்கள்பிள்ளை களைத் தடைச்செய்யாம லனுப்புவரெனச் சொல்லப் படுகிறது.

---

சிக்காக்கோவில் வசிக்கும் கோடீஸ்வரர் ஒருவர், தன்வேலையிலே கருத்தா யிருப்பவளும், இதரவேலைக் காரருடனே தன் எஜமான்வீட்டுக் காரியங்களைக் குறி த்துச் சம்பாஷியாதவளும், எப்போதும் கண்ணியமா யிருப்பவளும், மேசையில் போஜனம் பரிமாறப்படும் போது பிசகுசெய்யாதிருப்பவளும், ஒரு பார்வையில் விருந்தாளிக்கு வேண்டியனவும், வேண்டாதனவுமாகிய தீன்வகைகளைக் கிரகித்துக்கொள்ளக் கூடியவளும், நல்ல தாதியும் சுயம்பாகியும், தையற் காரியுமா யுள்ள ஓர் பெண் தமது வீட்டிலிருந்து தாம் சாகும்பரியந்தம் வேலை செய்வாளாயின் மாதச் சம்பளத்தை நீக்கி இர ண்டிலட்சம் பவுண் வெகுமானமாய்க் கொடுப்பதாகப் பிரசித்தம் செய்திருக்கிறாராம். இவ்விதமான எல்லாக் குண நலன்களும் வாய்க்கப்பெற்ற வேலைகாரப்பெண் எத்தேசத்தில் இருக்கின்றாளோ?

---

சிற்றெறும்புகளின் அதிகமான புற்றுகளாலேயே பிளேக் வியாதி அதிகமாயுண்டாகிற தென்னும் நோக் கங்கொண்டு பம்பாயிலுள்ள சிற்றெறும்பு புற்றுக்களை யெல்லாம் நாசமாக்கப்பட்டதென பம்பாய் பத்திரிகை யின் நேபரொருவர் கூறுகின்றனர். பிளேக் வியாதி வந்து மனிதரைத்தான் வாரிக்கொண்டு போகிறதென் றாலும்கூட கொசுவுகளுக்கும், எறும்புகளுக்கும், மனி தர் சாமான்களுக்கும் எலிகளுக்கும் கேடுகாலம் பிடித் திருக்கிறதே இதென்ன!

---

மலாய ஸ்டேட்டைச் சேர்ந்த சிலாஸ்கர் கிராமத் திற்கு, சிலோனிலிருந்து கடந்த மாதத்தில் ஏற்றுமதி யான 50-காக்கைகளை யல்லாமல் பின்னும் சில காகக் கூட்டங்களை யனுப்பப்படப் போகிறது. இவ்விதம் மலயா ஸ்டேட்டில் காகங்கள் நிரம்பப் பரவுமளவும் அனுப்பிகொண்டே வரப்படும். காகங்கள் மலாயாநாட் டுக்குக் குடியேற வந்துற்றது பாக்கியந்தான்போலும்.

---